மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram Monthly January 2015

விலை: ரூ.10/ இல்லம்:3 சுற்றம்:1 ஆசிரியர் விசவனூர். வே. தளபதி



கலைவாணரின்
இசை
வாரிசு



பொங்கல் புத்தாண்டு வாழ்த்துகள்

NEW

# FLAT FOR SALE @ BESANT NAGAR

## 4 - in -one luxury Apartment






Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!
# முற்றம்
Mutram monthly April 2014
பல்சுவை இதழ்

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் அப்பாத்துரை
அ.வெற்றிவேந்தன் எம் .ஏ., பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
இமயவரம்பன் பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
அ. உமாமகேசுவரி எம்.ஏ.,
ஜெ. ராஜா சிங்,
ஜெய்

தலைமைச் செய்தியாளர்கள்
வே. வளையாபதி
த. ஞானமணி பி.எஸ்.சி., பி.எட்.,

செய்தியாளர்கள்
பொன்முடி சிவகங்கை
A. அமல்ராஜ்
இரஞ்சிட
க. பவானி பி.ஏ.,
பெ. அர்ஜுன்
சாதிக்பாட்சா கோவை
ஜோசுவா
ஜூட
V. கணேஷ்
மேகநாத சிவசங்கரன்
வடிவமைப்பு
மேழி வரைகலை
புகைப்படக்காரர்
இரமேஷ்
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

Mutram
Indian bank. Account no. CA 920493454.
Rangarajapuram branch,
Kodambakkam, Chennai 600 024.

## உள்ளே

புத்தாண்டு கொண்டாட்டங்கள் தேவையா?
தலையங்கம் ....................................................4

வைகோ அறிக்கை....................................................6

வாங்கருவா.... சிறுகதை ..
இருங்கோவேள்....................................................10

ஊழல் குறையவே இல்லை
மருத்துவர் இராமதாசு .......................................... 14

தமிழீழம் என்னும் நெருப்பு
தமிழீழப் பாவேந்தர் ..............................................16

தமிழ்ப்பொங்கல்
கவிதை ..............................................................20

உண்மையைத் தேடி
இராஜாசிங் ..........................................................22

தமிழனை அரியணையில் ஏற்று ............................32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற கணக்கிற்கு
அனுப்பலாம்.

# புத்தாண்டு கொண்டாட்டங்கள் தேவையா?

ஆங்கியேர்கள் தந்துவிட்டுப் போன கொண்டாட்டம் இந்த ஆங்கில ஆண்டுப்பிறப்புக் கொண்டாட்டம். எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல், அனைவரும் கொண்டாடும் ஒரு கொண்டாட்டமாக மாறிப்போய்விட்டது. கிறித்துவத் தேவாலயங்களில், இந்துக் கோவில்களில், கடற்கரையில், விடுதிகளில், மனமகிழ் மன்றங்களில் என்று எல்லா இடங்களிலும் எல்லாத் தரப்பினராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. மதமாச்சரியங்களெல்லாம் ஆங்கிலப் புத்தாண்டில் அறவே கிடையாது. இந்துத்வா எல்லாம் இங்கே வேலை செய்யாது.

ஆண்டுதோறும் இந்தக் கொண்டாட்டங்களால் பல விபத்துகள், பல உயிரிழப்புகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் நாம் கொண்டாட்டங்களை நிறுத்திக் கொள்ளவோ, மாற்றிக் கொள்ளவோ இல்லை.

சீனாவின் மிகப்பெரிய நகரமான ஷாங்காயில் அமைந்துள்ள நதிக்கரையில் புத்தாண்டு கொண்டாட்டம் ஆண்டுதோறும் நடக்குமாம். இந்த ஆண்டும் நடந்தது. இரவு 11.35 மணிக்கு அங்கிருந்த ஒரு கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் இருந்து சிலர் போலி கரன்சி நோட்டுகளை கீழே வீசி எறிந்தனர். அவை 100 அமெரிக்க டாலர் போல் காட்சியளித்ததால் கூட்டம் அந்தக் கரன்சிகள் மீது பாய ஒரே கூச்சல், குழப்பம், அழுகை என்று சிக்கலாகிப்போய் இறுதில் 36 பேர் இறந்து போனார்கள் என்ற தகவல்தான் மிச்சம்.

கடலூர் அருகே புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது சில இளைஞர்கள் கேக் வெட்டி கொண்டாடிவிட்டு, மோட்டார்



சைக்கிளில் பெரியகுப்பம் கிராமத்திற்குள் நுழைந்து அண்ணா, எம் ஜி ஆர், திருவள்ளுவர் சிலைகள் மீது கல்வீசியும் உருட்டுக் கட்டைகளாலும் தாக்கி சிலைகளை சேதப்படுத்தியிருக்கின்றனர். அதோடு மட்டுமல்லாமல் சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், கார்களை அடித்து நொறுக்கியிருக்கின்றனர். சத்தம் கேட்டு வந்த சிலர் தட்டிக்கேட்க வார்த்தை அடிதடியில் போய் முடிந்திருக்கிறது.

மாங்காடு அடுத்த தென்காலனி அண்ணா தெருவைச் சேர்ந்த ரூபன் என்ற 18 வயது கேட்ரிங் மாணவர் புத்தாண்டைக் கொண்டாட தனது நண்பர் விஜய் என்பவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றிருக்கிறார். நரிவனம் சாலை, எம்ஜிஆர் நகர் அருகே சிலர் வழிமறித்துத் தாக்க பலத்த காயங்களுடன் ரூபன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பயனின்றி உயிரிழந்து போய்விட்டார்.

சென்னையில் மட்டும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது 170 பேர் காயமடைந்திருக்கின்றனர், நான்கு பேர் உயிரிழந்திருக்கின்றனர். காவல் துறையினர் தங்களது பணியைக் கவனமாகச் செய்தும் இந்த விபத்துகள் நடந்திருக்கின்றன. இந்த ஆண்டு காவல்துறை சிறப்பான பாதுகாப்புப் பணிகளைச் செய்த போதும் இவை நடந்திருக்கின்றன என்பது வேதனை தரும் விசயம்.

கிறித்துவ ஆலயங்களில் வழிபாடுகள் புத்தாண்டில் களை கட்டுகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை கடவுளை வணங்குகிறவர்கள், அன்று கோவிலுக்கு கண்டிப்பாக வந்துவிடுகிறார்கள். ஆலயம் நிரம்பி வழிகிறது. நான்கு பேர் இருக்கையில் ஏழு பேர் இடித்துக் கொண்டு அமர்ந்து நிம்மதியாக? இறைவனை வணங்கிச் செல்கின்றனர். இந்துக் கோவில்களிலும் அப்படித்தான். நெருக்கடிக்குப் பயந்து கட்டைகளைக் கட்டி தடுப்பு ஏற்படுத்தியிருந்தாலும் நெருக்கிக் கொண்டு, தள்ளிக் கொண்டு சாமி தரிசனம் செய்யும் பக்திமான்களை என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான். ஆனால் ஆங்கிலப் புத்தாண்டு அன்று மட்டும் எல்லாக் கடவுள்களும் ஆலயங்களைத் தவிர வேறெங்கும் இருக்க மாட்டார்கள் என்ற ஒரு புதிய விதியை கடவுள் சார்பாக பக்தர்கள் ஏற்படுத்திக் கொண்டு அவதிப்படுகிறார்களே, அநியாயமாக விபத்துக்குள்ளாகிறார்களே, அழிந்தும் போகிறார்களே, தேவையா இந்தக் கொண்டாட்டம்? எல்லோரும் சிந்திக்க வேண்டும். ஒன்று கொண்டாட்டத்தை விட வேண்டும். அல்லது கொண்டாட்ட நடைமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சியான புத்தாண்டு பிறக்கும்.

ஆசிரியர்

...

# முத்து விழா!

பன்னாட்டு தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களின் எண்பதாம் அகவை (80) முத்து விழா! வருகிற பிப்ரவரித் திங்கள் 9, 10 ஆகிய இரு தினங்கள் நடைபெற இருக்கிறது. அதுசமயம் உலகளாவிய தமிழ்த்தொண்டர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களின் முத்துவிழா (80) மலர் வெளிவர உள்ளது.

இம்மலரில் இடம்பெறத் தக்க வகையில் கவிஞரின் நூல்களைப் பற்றியோ, கவி ஆளுமைத்திறன் பற்றியோ, அவர்தம் பொதுவாழ்வு, தமிழ் வாழ்வு, சாதனைகள், களப்பணிகள், தொண்டுகள் பற்றியோ, ஆய்வு, வாழ்த்துக் கட்டுரை, கவிதை, படைப்பினை விரைவில் வழங்குமாறு வேண்டுகிறோம்.

தொடர்புக்கு: பெருங்கவிக்கோ வா. மு. சே. முத்து விழாக் குழு, 12/13 சாயி நகர் இணைப்பு, சென்னை, 92. தொலைபேசி 044-24798375, 28552237, 72997 67525, 98410 46898.

# மதுவிலக்கு மாரத்தானைப் புழுதி வாரித் தூற்றிய டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை! வைகோ அறிக்கை!

**ம**து எனும் கொடிய அரக்கனின் பிடியில் சிக்கித் தமிழகம் நாசமாகிக் கொண்டு இருக்கின்றது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு உள்ளிட்ட பஞ் சமா பாதகங்கள் அனைத்திற்கம் மது முக்கியக் காரணம் ஆகிவிட்டது.

அறநூல்களும் சான்றோரின் நெறிகளும் மதுவினால் சமுதாயத்திற்கு ஏற்படும் தீங்கான கேடுகளை எடுத்துக் கூறுகின்றன.

நாட்டு நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த தலைவர்கள், அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் போன்றோர் தமிழகத்தில் மதுவை அனுமதிக்கவில்லை. தமிழகத்தில் கோடிக்கணக்கான தாய்மார்களின் துன்பக் கண்ணீருக்கு மதுவே காரணம். சின்னஞ்சிறுமிகளையும் பெண்களையும் நாசப்படுத்தி பல நேரங்களில் கொலையும் செய்யும் கொடியோர் பெரும்பாலும் மது அருந்தியோர்தான்.

பள்ளி மாணவர்கள் மத்தியிலும் மதுப்பழக்கம் என்ற செய்தி அச்சமூட்டுகிறது. பெண்மையைப் போற்றிய தமிழகத்தில், மேட்டுக்குடி மகளிரிடத்திலும் பரவத் தொடங்கி இருப்பது அபாயத்தின் அறிகுறி.

பாழும் நரகத்தில் தமிழகம் சிக்கிவிடக் கூடாதே என்கின்ற பதற்றத்தாலும், கவலையாலும் நான் கடந்த பத்து ஆண்டுகளாக முழு மதுவிலக்கைத் தமிழகத்தில் அமுல்படுத்தவும், மதுவை எதிர்த்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 2004ஆம் ஆண்டு 1200 கிலோமீட்டர் தொலைவும், 2013 - 14 ஆம் ஆண்டுகளில் 1500 கிலோமீட்டா தொலைவும் வெயிலிலும் மழையிலும் நடந்து, நாள்தோறும் இலட்சக்கணக்கான மக்களை, குறிப்பாக, தங்கள் மனக்குமுறலை வெளிப்படுத்திய தாய்மார்களைச் சந்தித்து, மதுவின் பிடியில் இருந்து தமிழகத்தை மீட்க, அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகின்றேன்.

எந்த இடத்திலும் அரசியல் பேசவில்லை. எங்கள் கட்சிக்கு ஆதரவு தேடவில்லை. மாணவர்களிடம் மது எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்தினால்தான், தமிழ்நாட்டைப் பாதுகாக்க முடியும் என்று தீர்மானித்து, 2014 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் நாள், கோவை மாநகரில் மது ஒழிப்பு மாரத்தான் நடத்தினோம். ஓட்டத்தில் கலந்து கொண்ட 12,000 பேர்களுள், 11,500 பேர் மாணவ, மாணவியர்கள் ஆவர். அனைத்துக் கல்லூரிகள், பள்ளிகளின் முதல்வர்களும் தலைமை ஆசிரியர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கினர்.

அதன்பின் கடந்த 35 நாள்களாக, தலைநகர் சென்னையில், எங்கள் இயக்கத்தின் இளைஞர் அணிச் செயலாளர் தம்பி ஈஸ்வரன் அவர்கள் தலைமையில், 1000 பேர் ஓய்வு இன்றிப் பணியாற்றி, அனைத்துக் கல்லூரிகள், பள்ளிகளுக்கு நேரில் சென்று, மாரத்தான் விண்ணப்பப் படிவங்களைத் தந்து, பதிவு எண் அட்டைகளையும் வழங்கி, 2015 ஜனவரி 4 ஆம் நாள், மது ஒழிப்பு மாரத்தான் ஓட்டத்தை ஏற்பாடு செய்தோம். மாணவ, மாணவியர்கள் மிகுந்த ஆர்வத்தோடு விண்ணப்பங்களை நிரப்பித் தந்தது திகைக்க வைத்தது.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், மாணவிகள் இதில பங்கேற்பதால், அவர்களின் உடல் நலம் குறித்தும், பாதுகாப்புக் குறித்தும், மிகுந்த கவலை நிறைந்த எச்சரிக்கையோடு முன் ஏற்பாடுகளைச் செய்தோம். 14

மருத்துவர்கள், 25 மருத்துவ உதவியாளர்கள், 8 ஆம்புலன்சுகள் ஏற்பாடு செய்தோம். ஓடுபவர்கள் பருகுவதற்காக குடிதண்ணீர் ஏற்பாடு செய்து காகிதக் குவளைகளையே பயன்படுத்தினோம். காலையில் அவர்களுக்கு எளிய சிற்றுண்டி வழங்கினோம்.


மறுமலர்ச்சி தி.மு.க வுக்கு இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் துளியும் இல்லாததால், ஒரு இடத்திலும் கட்சிக் கொடிகளைக் கட்டவில்லை. கட்சி வண்ணத்தையும் பயன்படுத்தவில்லை. அரசு விழா போல், பல வண்ணக் கொடிகள் பளிச்சிட்டன.

தமிழக அரசின் காவல்துறை மிக்க ஈடுபாட்டுடன், இந்த மாரத்தான் ஓட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு, முழு அளவில் உதவியது. காலை நான்கு மணிக்கெல்லாம் நூற்றுக்கணக்கான காவலர்கள் கடமை ஆற்றத் தொடங்கினர்.

நம்ப முடியாத அதிசயம் நிகழ்ந்தது.

அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் மாணவ மாணவிகள் ஆயத்தமாகி பெற்றோருடன், ஆறு மணிக்கெல்லாம் மாரத்தான் தொடங்கும் இடத்திற்கு வந்தது, தமிழக வரலாற்றில் இது வரை நடைபெறாதது.

இந்த மாரத்தானுக்காக, எந்தச் சுவர் விளம்பரமும் செய்யவில்லை. தொலைக்காட்சி, பத்திரிகைகளில் விளம்பரங்கள் தரவில்லை. பொதுமக்களின் மனதில் உள்ள பயம் காரணமாகவும், இதை நடத்துகின்றவன் மீதான நம்பிக்கை காரணமாகவும் 68,000 பேர் பதிவு செய்தனர். 50,000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பெற்றோர்கள்,



தங்கள் பிள்ளைகளை ஆர்வத்துடன் அனுப்பி வைத்தனர். அவர்களே பிள்ளைகளை அழைத்து வந்தனர்.

இதுவரை உலகில் நடைபெற்ற மாரத்தானில், நியூயார்க் நகரில்தான் 49,000 பேர் பங்கேற்றுள்ளனர். ஆனால், சென்னை மாரத்தானில் 50,000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதால் இது கின்னஸ் சாதனை ஆகும்.

நாம் எதிர்பார்த்ததை விட பலமடங்கு வந்துள்ளார்களே, நெரிசலில் சிக்கி, காயமோ, உயிர்ச்சேதமோ பிள்ளைகளுக்கு ஏற்பட்டு விடக்கூடாதே என்று நான் அஞ்சிப் பதறியது என் மனசாட்சிக்குத்தான் தெரியும்.



அதனால்தான், மாரத்தான் பாதையில் முன் யோசனை இன்றிக் குறுக்கே வந்தவர்களை நானே சென்று விரட்டினேன். சில இங்களில், மாணவர்கள் கீழே விழுந்தபோது, எங்கள் தொண்டர்கள் உடனுக்குடன் உதவி பாதுகாத்தனர்.

மாணவச் செல்வங்களே, நீங்கள் எல்லாம் என் பிள்ளைகள். பேரப்பிள்ளைகள், உங்களை அனுப்பி வைத்த பெற்றோருக்கு கைகூப்பி வணங்கி நன்றி கூறுகிறேன். மதுவினால் வரும் கேடுகளைக் களைய, தமிழ்நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்ற பாடுபடுங்கள். பள்ளிகள், கல்லூரிகளில் சாதி எண்ணங்களுக்கு இடம் தராதீர், பல இலட்சம் மாணவர்களும் ஐம்பது நூறு பேர் செய்யும் தவறு, அரிவாள் கத்திகளுடன் மோதும் வன்முறை, மாணவர் சமுதாயத்திற்கே தலைகுனிவை ஏற்படுத்துகிறது. சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள். ஆசிரியர்களை மதித்து நடங்கள். பெற்றோரை வணங்குங்கள். தேர்வில் மதிப்பெண்கள் குறைந்தால் கவலைப்படாதீர்கள். இப்பொழுது உங்களுக்கு அரசியல் கட்சிகள் வேண்டாம். குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு அரசியலைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று நான் உரை ஆற்றியபோது, மாணவர்கள் எழுப்பிய ஆரவாரம் விண்ணை முட்டியது.

ஒரு மாணவனுக்குக் கூட காயம் ஏற்படவில்லை. இந்த நாளைப் போல என் வாழ்வில் நான் என்றும் மகிழ்ந்தது இல்லை.

ஆனால் டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ், வைகோ கடற்கரையைக் குப்பைக் கிடங்காக்கி விட்டான் என்று சேற்றை வாரி வீசி இருக்கின்றது.

நாங்கள் பிளாஸ்டிக் குவளைகளைப் பயன்படுத்தவில்லை. காகிதக் குவளைகளையே பயன்படுத்தினோம். உணவுப் பொட்டலங்கள் வழங்கினோம்.

எங்கள் மாவட்டச் செயலாளர்கள் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன், கழிவுகளை அப்புறப்படுத்துகின்ற வேலையில், வெயிலைப் பொருட்படுத்தாமல் பகல் 12 மணி வரை கடமை ஆற்றினர்.

ஆனால், சுற்றுச் சூழலைப் பற்றிய அக்கறையும், சமூகச் சிந்தனையும் எங்களுக்கு இல்லை என்று, தொண்டு இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் மீது பழியைப் போட்டு, டைம்ஸ் ஆஃப் இந்தியா சாடி உள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்க, உலக கோடீசுவரனின் ஸ்டெர்லைட்டை எதிர்த்து, 18 ஆண்டுகளாக நான் அறப்போர் நடத்திவருவது அனைவருக்கும் தெரியும். தற்போது மீத்தேனை எதிர்த்துக் களத்தில் நிற்கிறேன்.

நாங்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக, தன்னலம் இன்றி, விளம்பரம் இன்றிச் செய்த இந்த நல்ல காரியம், பெரும்பாலான பத்திரிகைகளில் இடம் பெறவில்லை என்பதால் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. என்னால் இயன்ற பணிகளை எனது கடமைச் செய்கிறேன்.

ஆனால் டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை, தமிழகத்தில் தொடங்கிய நாளில் இருந்து, என் மீது வன்மம் பாராட்டி வருகிறது. இத்தனை ஆண்டுகளில், அபூர்வமாக ஓரிரு முறைதான் என் அறிக்கை ஒருசில வரிகள் இடம்பெறும். அதையும் பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்தாலதான் தெரியும்.

முல்லை பெரியாறு அணையைப் பாதுகாக்க நான் கடுமையாகப் போராடியதால்தான், டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையை இயக்கிக் கொண்டு இருக்கின்ற சில முக்கியமானவர்களுக்கு என் மீது கடுமையான வெறுப்பு உண்டு என்பதை நன்றாக அறிவேன்.

என் வாழ்வில் எந்தப் பத்திரிகையையும் மிரட்டுகின்ற தவறை நான் செய்தது இல்லை. பத்திரிகைச் சுதந்திரத்திற்காக, மிசாவில் ஓராண்டு, பொடாவில் 19 மாதம் சிறையில் இருந்தவன் நான்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை, மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனத்தின் ஊதுகுழல். என் மீது பொதுமக்களுக்கு நல்லெண்ணம் வந்து விடக்கூடாது என்பதற்காகவே, பல்வேறு எதிர்கால வஞ்சகத் திட்டங்களைக் கொண்டிருக்கின்ற கூட்டத்தின் பிரதிபலிப்புத்தான் எங்கள் முயற்சிகளைக் களங்கப்படுத்த முயலும் போக்கும் ஆகும்.

கடற்கரை மதுக்கூடாரமாகவும் களியாட்ட முகாமாகவும் மாறுவது டைம்ஸ் ஆஃப் இந்தியாவுக்கு இனிக்கிறது. தமிழகம் எப்படியாவது சீரழியாதா என்ற நோக்கமும் தெரிகிறது. அதனால்தான், மேல்நாட்டு மதுவை மையாக்கி அச்சிட்டு உள்ளனர்.

கொடியவன் ராஜபக்சேயை எதிர்த்து, மத்தியப் பிரதேச மாநிலத்தில் தேசிய நெடுஞ் சாலையில் கிடந்து, வெயிலிலும் மழையிலும் நானும் 1200 தோழர்களும் போராடியபோது, சாலையோரத்து மலக்கழிவுகளை நாங்கள் அகற்றினோம். உணவு அருந்தியபின், காகிதத் தட்டுகளை, குவளைகளைப் பைகளில் சேகரித்துக் குப்பைக் கிடங்குகளில் கொண்டு போய்ச் சேர்த்தோம். இதைக் கவனித்துக் கொண்டு இருந்த மத்தியப் பிரதேச காவல்துறை ஐ.ஜி. போராட்டத்தில கைதாகி நாங்கள் விடுதலையானபோது, என் கைகளைப் பற்றிக் கொண்டு சொன்னார். இத்தகைய ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வேறு எந்த அரசியல் கட்சிகளிடமும் நான் பார்த்தது இல்லை. எங்கள் காவல்துறையினர் உங்களிடம் இருந்து கற்றுக் கொண்டனர். ஏன், உங்கள் ரசிகர்களாகவே ஆகி விட்டனர் என்றார்.

தமிழகத்தின் நன்மைக்காக, வருங்காலத் தலைமுறையின் நல்வாழ்வுக்காக, எள் அளவு சுயநலமும் இல்லாமல், தமிழ்நாட்டின் ஒரு ஊழியக்காரனாக வேலை செய்யும், என் மீது வீசப்படும் தாக்குதல்களை, நான் நேசிக்கும் தமிழக மக்களுக்குத் தெரிவிக்கவே இந்த அறிக்கையைத் தந்து உள்ளேன்.

# வாங்கருவா! சிறுகதை

தேர்வு விடுமுறைக்காக ஊருக்கு வருகிறான், வந்ததும் இருக்கிற பனைமரங்களிலெல்லாம் ஏறி நுங்குகளை வெட்டிச் சாய்க்கிறான். அவனும் குடிக்கிறான். எல்லோரும் குடிக்கிறோம். ஆனால் அவன் வருகிற வரை நாம் நுங்கு குடிக்காமல் பனைமரத்தை அண்ணாந்து பார்த்தபடியே இருக்க வேண்டியிருக்கிறதே என்று தன் நிலையைப் பற்றியும் தனது தம்பி பயிர்க்காவலனையும் நினைத்து நினைத்து புலம்பிக் கொண்டிருந்தான் வாகை அரசன். பக்கத்து ஊரில் படித்துக் கொண்டு கிராமத்திலே இருந்தாலும் தன்னால் முடியவில்லையே என்ற ஏக்கம் அவனுக்குள் இருந்து வந்தது. இவர்களின் தந்தை விவசாயி மட்டுமல்ல விவசாயத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். தான் செய்கின்ற இந்த உழவுத்தொழில்தான் உலகத்திலே மிக உயர்ந்தது என்பதை அறிந்திருப்பவர். ஆகவேதான் பிள்ளைகளுக்கு இப்படியெல்லாம் பெயர் வைத்திருந்தார்.

வாகை அரசனின் மனம் குமைந்து கொண்டிருந்தது. இந்த முறையாவது தம்பி பயிர்க்காவலனின் உதவி இல்லாமல் தாமே பனையில் ஏறி நுங்கு வெட்டிக் குடிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு சிறிய வெட்டருவாளை எடுத்துக் கொண்டு மத்தியானம் உச்சிவெயில் சமயத்திலே நுங்குகள் நிறைந்து காணப்பட்ட ஏந்தக்கண்மாய் கொல்லையின் வடமேற்கு மூலையில் உள்ள பனைமரத்தை நோக்கிச் சென்றான் வாகை அரசன். சட்டையைக் கழற்றிவிட்டு, கால்சட்டையின் பின்னால் அந்தச் சிறிய வெட்டருவாளை சொருகிக் கொண்டு பனைமரைத்தைக் கட்டிப் பிடித்து ஏறத்தொடங்கினான். இரண்டு மூன்று அடி ஏறியிருப்பான். நெஞ்சிலே வலி ஏற்பட்டது. பனைமரத்தின் கரடுமுரடான பகுதி அவனது பனியனையும் தாண்டி குத்திக் கொண்டிருந்தது. ஆனாலும் நுங்கு குடித்தாக வேண்டுமே! பனைமரத்தைக் கட்டிப்பிடித்தபடியே சிறிது நேரம் ஓய்வெடுத்தான். மீண்டும் ஏறினான். வேகம் முன்பிருந்ததைவிட குறைந்துவிட்டதை அவன் மனம் சுட்டிக்காட்டியதோடல்லாமல் உன்னால் முடியாது என்றது. நான் ஏறியே தீருவேன் என்று இன்னும் சில அடி தூரம் கால்களை மேலே மேலே வைத்து ஏறினான். தனது நெஞ்சின் வலியைக் குறைத்துக் கொண்டிருந்த பனியனும் கிழிந்து விட்டது. அவனுக்கு கொஞ்சம் மனத்தளர்ச்சி ஏற்பட்டது. அதுவே பெரிதாகி மெதுவாக பனைமரத்திலிருந்து இறங்கினான். சே... ஏற முடியாமல் போய்விட்டதே என்று நினைத்தாலும் கால்வாசி பனையை ஏறிவிட்டோமே என்ற ஒரு சிறிய நிம்மதியும் ஏற்பட்டது.

சிறிது நேரம் பனைமரத்து நிழலிலேயே அமர்ந்திருந்தான். அந்தப் பனைமரத்தின் நிழலோ அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தது. அந்த நிழலின் மேல் எரிச்சல்பட்டுக் கொண்ட வாகைஅரசன் வீட்டை நோக்கி நடந்தான். கிழிந்த பனியனை கால்சட்டையில் மடித்து வைத்துக் கொண்டான். வீட்டிற்கு வந்ததும் யார் கண்ணிலும் படாத ஒரு இடத்தில் பனியனை மறைத்து வைத்தான். இவனது செயலை கண்டும் காணாதும் இருந்த இவனது அப்பத்தா பார்த்துவிட்டு, மருமகளிடம் சென்று அடியே அழகுமீனா மூத்தவன் எதையோ அடுக்குப்பானைக்கு பின்னாடி மறைச்சு வைக்கிறாண்டி என்னன்னு போய்ப்பாரு என்று சொல்ல, அம்மா அழகு மீனாள், பனியனைப் பார்த்து, எடுத்து மகனிடம் விபரம் கேட்டாள்.

வாகை அரசன் உண்மையைக் கூறிவிட்டான். சின்னவன்தான் ஒருவாரத்துக்குள்ள வந்துருவானே, அவன் வந்தவுடனே வெட்டிக் குடிக்க வேண்டியதுதானேடா அதுக்குள்ள ஒனக்கு என்ன அவசரம். நல்ல புள்ள போ,

பனியனை கிழிச்சிட்டு வந்து நிக்கிறே. என்று அவனைத் திட்டாமல் திட்டிவிட்டு அவள் வேலையைச் செய்ய போய்விட்டாள். வாகைஅரசனின் இயலாமை சினமாக அப்பத்தா பக்கம் திரும்பியது. ஏய் கெழடி இரு, இரு ஒன்னைய வச்சுக்கிறேன். அம்மாக்கிட்ட போட்டா கொடுக்கிறே, ஒனக்கு வெத்தலை பாக்கு யாரு வாங்கித்தருவா பாப்போம் என்று கூறிவிட்டு குளத்தை நோக்கி நடந்தான் குளிப்பதற்காக. குளத்தில் விழுந்தவுடன் அவனது நெஞ்சு உள்ளும் புறமும் எரிந்தது. வெளியே காயத்தால் எரிந்தது. உள்ளே முழுப்பனையும் ஏற முடியவில்லையே என்ற எரிச்சல். தண்ணீர் பட்ட எரிச்சலைவிட மன எரிச்சல்தான் அதிகமாக இருந்தது. விடக்கூடாது எப்படியும் தம்பி வருவதற்குள் நாம் நுங்கு குடித்துவிட வேண்டும் என்று மனதுக்குள் முடிவு செய்து கொண்டான்.

இரண்டு நாட்கள் கழித்து அதே பனையில் ஏறினான். பனியன் கிழிந்து விடக்கூடாது என்பதற்காக கழற்றி வைத்துவிட்டு ஏறினான். கடந்த முறை ஏறியதைவிட ஒரு அடி அதிகமாக ஏறியிருப்பான் அவ்வளவுதான் நெஞ்சில் எரிச்சல் அதிகமாக இருந்தது. குனிந்து தன் நெஞ்சைப் பார்த்தபோது நெஞ்செல்லாம் சிவந்து இரத்தம் வெளியே வரத் துடிப்பது தெரிந்தது. இனி ஏறினால் சரிப்பட்டு வராது என்று கீழே இறங்கி விட்டான். சிறிது நேரம் பனைமரத்தடியில் அமர்ந்திருந்தான்.

பல மரங்களில் பிறர் யாரும் நுங்கு வெட்டக்கூடாது காவல் போடப்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக பனைமரத்தில் பனையோலை கட்டப்பட்டிருந்தது. வாகை அரசனின் பனையிலும் அவன்



தம்பி பயிர்க்காவலன் ஒலையைக் கட்டி வைத்திருந்தான். அந்த ஒலையை எட்டும் அளவிற்குக் கூட இவனால் ஏற முடியவில்லை. சுற்றிலும் உள்ள சில மரங்களைத் தவிர பல மரங்களில் நுங்கே இல்லை. எல்லோரும் வெட்டியிருந்தார்கள். சில வேளைகளில் காவல் பனைகளிலும் கைவைத்து விடுவார்கள் சிலர். சில நேரம் பிடிபடுவார்கள். பல நேரம் தப்பித்து விடுவார்கள்.

அடுத்த நாள் வாகை அரசன் ஒரு முடிவுக்கு வந்தான். யாரும் தன்னை கவனிக்காத வேளையில் வாங்கருவாளை எடுத்துக் கொண்டு பனைமரத்தடிக்கு வந்து விட்டான். நம்மால் பனை ஏற முடியவில்லை. கீழே நின்று கொண்டு வாங்கருவா கொண்டு நுங்கை அருத்துவிடலாம் என்ற முயற்சியில் இறங்கினான். காவோலைகளை எல்லாம் விலக்கி வாங்கருவாளை நுங்குக்குலையின் அடிப்பாகத்தில் வைத்து விட்டான். கைகள் சோர்ந்து விட்டன. இருந்தாலும் வாங்கருவாளை சரியாக அருப்பதற்கான இடத்தில் வைத்திருக்கிறோமா என்று பார்த்துவிட்டு அருக்க ஆரம்பித்தான் வாங்கருவாளைப் பிடித்து அவனது பின்பக்கமாக இழுக்கத் தொடங்கினான். சிறது வலிமையாக இழுத்தான். வாங்கருவாக் கம்போடு அவன் உழுத கட்டியில் விழுந்தான்.

வாங்கருவாக் கம்பு மட்டும் கையில் இருந்தது. வாங்கருவா நுங்குக் குலையிலேயே மாட்டிக் கொண்டது. போச்சு, அப்பா ஆட்டுக்கு வேப்பங்கொலை அருக்க வாங்கருவாளத் தேடுனா நம்ம மாட்டிக்குவோமே என்று அச்சமடைந்து உழுத கட்டியையும், வரப்பில் கிடந்த கற்ளையும் எடுத்து அருவா மீது வீசினான் அருவா விழுவதாக இல்லை. சோர்ந்து போய் கம்புடன் திரும்பினான் வீட்டிற்கு. அப்பா சொல்லாமலே ஆடுகளுக்கு வேப்பங்கொலையை கொண்டு வந்து போட்டான்.

வாகை அரசனின் தந்தைக்கோ மகிழ்ச்சி. மகன் படிக்கிறவனாக இருந்தாலும் ஆடுகளுக்கு இரை போடுகிறானே என்று. எங்கே, நாம் வாங்கருவா விசயத்தில் மாட்டிக் கொள்வோமோ என்று தினமும், ஆடுகளுக்கு தன்னால் முடிந்த அளவு எங்கங்கேயோ போய் வேப்பங்கொலை கொண்டு வந்து போட்டான். ஒருமுறை தந்தையே கேட்டுவிட்டார். அரசா நம்ம மரத்துல கொலை இருக்கும்போது நீ ஏன்டா வெளியே போய் கொலை கொண்டு வந்து போடுறே என்று, வாகை அரசனோ, செழியன் அவனோடு ஆடுகளுக்கு வெட்டும்போது எனக்கும் கொடுத்தான் என்று தனது நண்பன் பெயரைச் சொல்லிச் சமாளித்தான்.

வெளியூரில் படித்துக் கொண்டிருந்த பயிர்க்காவலன் ஒரு நாள் மாலையில் ஊர்திரும்பினான். மகனை பெற்றோர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர் சின்ன வயதில் தங்களைப் பிரிந்து போய் படிக்கிற பயிரின்மீது அவர்களுக்கு கொஞ்சம் அளவு கடந்த பாசம் இருந்தது. இது ஒரு சிலநேரங்களில் வாகை அரசனுக்கு வெறுப்பாக இருந்தாலும், விடுதியில் தங்கிப் படிப்பது எவ்வளவு கடினமானது என்பதை தனது நண்பர்கள் மூலம் அறிந்திருந்ததால், தம்பி மேல் வாகை அரசனுக்கும் பாசம் இருந்தது. இரவு அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுவிட்டு, பேசிக் கொண்டிருக்கையில், பயிரு உன் அண்ணன் நுங்கு நுங்குன்னு கெடக்குறான்டா, பனைஏறுறேன்னு பனியனை வேற கிழிச்சிட்டு வந்துட்டான். நாளைக்கு நீ போய் நுங்கு வெட்டிக் கொடுப்பா என்றாள் தாய். எனக்கும் நுங்கு குடிக்கணும்போல இருக்கும்மா என்று கூறிவிட்டு தூங்கச் சென்றான் பயிர்க்காவலன்.

அடுத்த நாள் அண்ணனும் தம்பியும் நுங்கு வெட்டக் கிளம்பினர். உடன் தாயும் கிளம்ப வாகை அரசனோ அம்மா வந்தால் வாங்கருவா விசயத்தில் நாம் மாட்டிக்கொள்வோமே என்ற அச்சத்தில் "அம்மா நீங்க இங்கேயே இருங்க நாங்க நுங்கு வெட்டி வீட்டுக்கு கொண்டு வர்றோம்" என்றான். சரிப்பா என்று வேறு வேலைகளைப் பார்க்கப் போய்விட்டாள் தாய்.

பனைமரத்தை நெருங்குகிற வேளையில் தம்பியிடம், பயிரு, வாங்கருவா

வச்சு நுங்கு அருத்தேன். அருவா நுங்குக் கொலையில மாட்டிக்கிச்சுடா, நீ பனையில ஏறி முதல்ல அந்த அருவாளை எடுத்து கீழே போடு, அப்புறம் நுங்கை வெட்டு என்றான். பயிர்க்காவலன் சிரித்துக் கொண்டே பனைமரத்தடிக்குச் சென்று, சட்டையைக் கழற்றி விட்டு, நெஞ்சு படாமல் பனையேறினான். இவனால் மட்டும் எப்படி இவ்வாறு ஏறமுடிகிறது என்று அண்ணாந்து பார்த்துக் கொண்டே நின்றான் வாகை அரசன். வாங்கருவாளை கீழே போட்டான் பயிர்க்காவலன். தொடர்ந்து நுங்குகளையும் வெட்டிப் போட்டான். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீடு வந்தடைந்தார்கள்.



காலங்கள் ஓடியது. வாகைஅரசன் நகரத்தில் நல்ல வேலையில் அமர்ந்தான். பயிர்க்காவலன் பயிர்க்காவலனாகவே இருந்தான். விவசாயப்படிப்பு படித்து விட்டு, உழவு வேலைகளையும் செய்து கொண்டு, சிற்றூர்களில் உள்ள பயர்களுக்கெல்லாம் காப்பீடு செய்யும் முகவராகவும் செயல்பட்டு வந்தான். இருவருக்குமே திருமணம் முடிந்து குழந்தைகள் இருந்தனர்.

வாகைஅரசன், பிள்ளைகளின் முழு ஆண்டுத் தேர்வு முடிந்ததும் குடும்பத்துடன் ஊருக்கு வந்தான். வந்த அடுத்த நாள், வாகை அரசனின் பிள்ளைகள் “சித்தப்பா நுங்கு வெட்டிக் கொடுங்க, அப்பாவுக்குக் கூட நீங்கதான் நுங்கு வெட்டித் தருவீங்களாமே” என்று கேட்டார்கள். பயிர்க்காவலன் சிரித்துக் கொண்டே, வாங்க வாங்க என்று அனைவரையும் அழைத்துக் கொண்டு, வெட்டருவா, வாங்கருவா இரண்டையும எடுத்துக் கொண்டு பனைமரத்தடிக்குச் சென்றான். போகிற வழியிலேயே என்னடா பயிரு பனைக் காவல் எல்லாம் இல்லையாடா எந்த மரத்துலயும் ஓலை கட்டக் காணோம். ஆனா நுங்கு நிறையக் கெடக்கு என்று தம்பியிடம் கேட்க, அண்ணே அதெல்லாம் நம்ம சின்னவங்களா இருந்தப்பதான் காவல் எல்லாம். இப்போ பனை ஏறுறதுக்கு ஆளும் கெடையாது நுங்கு சாப்பிடறதுக்கும் ஆளு கெடையாது எல்லாரும் பட்டணம் போயிட்டாக, ஊரே வெறிச்சோடிக் கெடக்கு என்றான்.

ஆமா பயிரு, அப்பா மாதிரி உன்ன மாதிரி உழவுத்தொழிலை கடவுளாப் பாக்குறவங்க இல்லையே தம்பி என்ன பண்றது என்று பேசியபடியே பனைமரத்தடிக்குச் சென்றான். பயிர் வாங்கருவாவை வைத்து நுங்குக் குலையை அறுக்க ஆரம்பித்தான். வாகை அரசனுக்கோ வியப்பாகப் போய்விட்டது. என்னடா தம்பி நீதான் நல்லா பனையேறுவியே, இது என்ன புதுசா வாங்கருவாளை பயன்படுத்தறே என்று கேட்க, எதுவுமே தொடர்ந்து பழக்கத்துல இருந்தாத்தாண்ணே சரியா வரும். பனை ஏறுறத விட்டுட்டேன். அதுக்கு தேவையும் இல்லாமப் போச்சுண்ணே என்றான் பயிர்க்காவலன். இருவருமே சிற்றூர்களில் ஏற்பட்டிருக்கும் உழவுத்தொழில் தொய்வைப் பற்றியும், மக்கள் எப்படி பசியின்றி வாழப் போகிறார்கள் என்பதை கவலையோடு பேசிக் கொண்டே பிள்ளைகளுக்கு நுங்கை வெட்டிக் கொடுத்து, எப்படிக் குடிப்பது என்றும் சொல்லிக் கொடுத்தார்கள்.

இருங்கோவேள்.

# ஊழல் குறையவே இல்லை

மருத்துவர் இராமதாசு

கடந்த 5ஆம் தேதி மருத்துவர் இராமதாசு அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது: 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நடந்த ஊழல்கள் குறித்து விசாரணை நடத்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன். இந்தியாவிலேயே ஊழலுக்காக பதவி பறிக்கப்பட்ட ஒரே முதலமைச்சர் ஜெயலலிதாதான். சொத்துக்குவிப்பு வழக்கில் மேல்முறையீடு மனுமீது விசாரணை தொடங்குகிறது. இந்த வழக்கில் பவானிசிங்கை நீக்க



வேண்டும் என்று நான் தொடர்ந்து கூறி வருகிறேன். திமுக பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் மனு செய்திருக்கிறார்கள். அதை நிராகரித்திருப்பதாக எனக்கு சற்றுமுன் தகவல் கிடைத்தது. பேராசிரியர் அவர்கள் உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டும். இந்த வழக்கு இயல்பான முடிவை எட்ட வேண்டுமானால் திமுக பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இந்த வழக்கில் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும்.

1996 ஆம் ஆண்டு போடப்பட்ட சொத்துக்குவிப்பு வழக்கு 18 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டிருக்கிறது. 185 முறை வாய்தா வாங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்டு எந்தப் பதவியிலும் இருக்க முடியாது என்ற தீர்ப்பும் வந்திருக்கிறது. ஆனால் தனது மேல் முறையீட்டு மனுவை விரைவாக விசாரித்து முடிக்க வேண்டும் என்று அவர் துடிக்கிறார். இந்த அவசரத்துக்குக் காரணம் அவர்தான் சொல்ல வேண்டும். தன்னிடம் உள்ள பணம், அதிகாரத்தை வைத்து சட்டத்தை வளைத்துவிடலாம் என்று ஜெயலலிதா நினைக்கிறார். அது நடக்காது. 1996க்குப் பிறகு ஜெயலலிதா, தோழி, அவரது உறவினர்கள் திருந்தினார்களா என்றால் இன்றுவரை திருந்தவில்லை. ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவர்கள் பலகோடி சொத்துக்களைக் குவித்திருப்பதாகத் தெரிகிறது.

குறிப்பாக, ஜெயா தொலைக்காட்சி 1999இல் தொடங்கப்பட்டது. இது சசிகலா குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தொடங்கும்போது 1 சேனல். இப்போது நான்கு சேனல்கள். இதன் மதிப்பு 500 கோடி. டாஸ்மாக் நிறுவனத்துக்கு அதிக அளவில் மதுவை வழங்கும் கோல்டன் மிடாஸ் மதுஆலை. அந்த ஆலையின் 2012 - 2013 ஆம் ஆண்டின் வருமானம் 1077 கோடி. இந்த நிறுவனம் 2002 ஆண்டு தொடங்கப்பட்டது. சசிகலா உறவினர்களால் நடத்தப்படுகிறது. ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றன் இதில் இயக்குநராக இருந்தார்.

கொடநாடு எஸ்டேட் சொத்து வழக்கில் உள்ளது. பலகோடி செலவு செய்து மாளிகை கட்டப்பட்டுள்ளது. கொடநாடு எஸ்டேட்டில் ஹெலிபேட், கிரீன் டீ எஸ்டேட்டில் ஹெலிபேட் உருவாக்கப்பட்டுள்ளது. சசிகலாவின் உறவினர்களால் எண்ணற்ற தொழிச்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 1996ஆம் ஆண்டுக்குப்பிறகு

அவரும் அவரது தோழியும், தோழியின் உறவினர்களும் சேர்த்து வைத்துள்ள சொத்துகள் பற்றி இன்னொரு விசாரணை வேண்டும். ஊழல் வழக்கில் ஜெயலலிதா தண்டிக்கப்பட்ட பிறகாவது ஊழல் குறைந்திருக்கிறதா என்றால் இல்லவே இல்லை என்று பொதுமக்களும் கூறுகிறார்கள். அனைத்துத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. 2,40,000 பசுமைவீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. இதில் 900 கோடி கையூட்டாகப் பெறப்பட்டிருக்கிறது. இந்திராகாந்தி வீடு கட்டும் திட்டத்தில் 1000கோடி கையூட்டுப் பெறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாடு அரசுப் பேருந்து கழகத்தில் 7500 ஓட்டுநர் நடத்துனர்கள் தேர்வு செய்யப்பட்டு 3 முதல் 5 இலட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உதவிப்பொறியாளர் வேலைக்கு 5 இலட்சம் லஞ்சம் என்றும் நிர்ணயிக்கப்பட்டு அந்த வகையில் 300 கோடி ஊழல் நடந்திருக்கிறது. ஓட்டுநர் நடத்துநர் தேர்வு நீதிமன்ற வழக்கில் உள்ளது. அரசு விழிபிதுங்கி நிற்கிறது. லஞ்சத்தை திருப்பிக் கொடுக்க வேண்டுமே என்று.

மின்சாரக் கொள்முதலில் ஊழல். தனியாரிடமும் வெளிமாநிலத்திலும் மின்சாரம் வாங்கியதில் ஆண்டுக்கு 300கோடி வரை ஊழல் நடந்திருப்பதாகத் தெரிகிறது. எண்ணூரில் புதிதாகத் தொடங்கப்படும் மின் திட்டத்தில் ரூ1500கோடி லஞ்சம் பெறப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு 5 கோடியிலிருந்து பத்துக் கோடி வரையும் பேராசிரியர் பதவிக்கு 25 முதல் 30 இலட்சம் வரையும் கையூட்டுப் பெறப்படுவதாகத் தெரிகிறது. ஓராண்டில் 10000 ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு 500 கோடி வரை கையூட்டுப் பெறப்பட்டுள்ளது. சத்துணவுப் பணியாளர் பதவிக்கு இரண்டு லட்சம் முதல் கையூட்டுப் பெறப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியர் இடமாற்றம் கலந்தாய்வு மூலம் இல்லாமல் ஒன்றரை இலட்சம் வரை கையூட்டுப் பெற்றுக் கொண்டு இடமாறுதல் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

தனியார் பள்ளிகளின் அங்கீகாரம் புதுப்பிக்க பத்து இலட்சமும் புதிதாக தனியார் பள்ளிகள் தொடங்க முப்பது இலட்சமும் தரவேண்டியுள்ளது. செவிலியர் (நர்ஸ்) இடமாற்றத்திற்கு ஒரு இலட்சம் கையூட்டுப் பெறப்படுகிறது. பத்து ஆண்டுகளில் கிராணைட் கற்கள், ஆற்றுமணல் போன்ற இயற்கை வளங்களைச் சுரண்டி விற்றதில் 5 லட்சம் கோடி ஊழல் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய ஆட்சிப்பணி அதிகாரி சகாயம் அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார். விசாரணைகளில் அதிர்ச்சியூட்டும் செய்திகள் வெளிவருகின்றன. மலை மடுவாகிப் போன நிகழ்வெல்லாம் நடந்திருக்கிறது. மலை விழுங்கி மகாதேவன் என்று சொல்வார்களே அது போல் சில மகாதேவன்கள் மலைகளையே விழுங்கியிருக்கிறார்கள்.

சொத்துக்குவிப்பு வழக்கை விரைவில் முடிக்க வேண்டும் என்று ஜெயலலிதா துடிக்கிறார். தலைமை நீதிபதி லோதா அவர்கள் ஒருமுறை கூறும்போது, அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வழக்கை எல்லாம் சரியாக விசாரிக்காமல் விரைவாக முடிக்க முடியாது என்று கூறியிருக்கிறார். ஆனால் நீதி மன்றம் ஜெயலலிதா வழக்கில் அவசரம் காட்டுவது ஏன் என்று தெரியவில்லை.

ஊழல்கள் குறித்த விரிவான ஒரு அறிக்கை தயாரித்து அதை ஆளுநரிடம் கொடுக்க இருக்கிறோம். தமிழகத்தில் எல்லாம் ஊழலாகிப் போய்விட்டது. வாய்மையே வெல்லும் என்ற அரசு வசனத்தை எடுத்து விட்டு ஊழலே வெல்லும் என்று போடாததுதான் பாக்கி. நான் சொல்லுவதை எல்லா ஊடகங்களும் வெளியிடுவதில்லை. பல ஊடகங்கள் நமது எம்ஜிஆர் பத்திரிகை போல் நடந்து கொள்கின்றன. தினத்தந்தியில் மட்டும் வருகிறது அதுவும் பிழியப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சிகளாக இருக்கிற எங்களை விட நீங்கள் (செய்தி ஊடகத்தினர்) இவற்றை எல்லாம் வெளிக்கொணர வேண்டும். என்றார்.

இமயவரம்பன்

# தமிழீழம் என்னும் நெருப்பு 3

## தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்

### தமிழ்நாடும் - தமிழீழமும்

தமிழ்த் தேசிய இனத்தின் இரட்டைத் தாயகங்களான தமிழ்நாடும் தமிழீழமும் இன்று அழிவின் விளிம்பில் இருப்பதைத் தமிழர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

தமிழ்த் தேசிய இனத்தின் உயிர்க்கூறுகளில் ஒன்றான தாய்மொழியாம் தமிழோடு ஆங்கிலம் கலந்து - தமிழ் நாட்டில் தமிழர்கள் தமிழ்த்தேசிய இனத்தை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முன்பு வடமொழிக்கலப்பால் இந்தி-மராத்தி-கன்னடம்-தெலுங்கு போன்ற தேசிய இனங்களாக மாறியதைப்போல் - இன்று ஆங்கில மொழிக் கலப்பால் தமிங்கில தேசிய இனமாகத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மாறிக் கொண்டிருக்கிறீர்களே - முகம் சுழிக்காமல் ஒப்புக் கொள்ளுங்கள்.

ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனமாக மாறிக்கொண்டிருக்கும் காலத்தில் அந்த மாற்றம் ஒரு தேசிய இனத்தின் கண்களில் படுவதில்லை.

தமிழன் தெரிகிறான், தெலுங்கன் தெரிகிறான். தமிழன் தெலுங்கனாக மாறிக் கொண்டிருந்தது அக்காலத்தில் எந்தத் தமிழனுக்குத் தெரிந்தது.

அறிஞர் டார்வின் கொள்கை நாம் அறிவோம். குரங்கிலிருந்து மாந்தன் தோன்றினான் என்றார் அவர்.

குரங்கு தெரிகிறது. மாந்தன் தெரிகிறான். குரங்கிலிருந்து மாந்தனாக நிகழ்ந்துகொண்டிருந்த மாற்றம் அக்காலத்தில் எந்தக் குரங்குக்குத் தெரிந்தது? எந்த மாந்தனுக்குத் தெரிந்தது.

மாறிக் கொண்டிருக்கும் காலத்தில் மாறிக் கொண்டிருப்பவனுக்கு மாறிக் கொண்டிருப்பது தெரிவதில்லை என்பதை மாறிக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டுத் தமிழர் உணரவேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் ஆங்கிலக் கலப்பை உடன் நிறுத்தவில்லை எனில் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் தமிழர்களின் இரட்டைத் தாயகங்களில் ஒன்றான தமிழ்நாடு தமிங்கில நாடாகிவிடும்.

தமிழைக் கல்விமொழி ஆக்கிச் சட்டம் இயற்றவும் - ஊடகங்களிலும் விளம்பரங்களிலும் - எழுத்தாளர் படைப்புக்களிலும் ஆங்கிலம் கலப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கிச் சட்டமியற்றவும் தமிழ்நாட்டு அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர்களின் இன்னொரு தாயகமான தமிழீழத்தில் ஒரு தேசிய இனத்தின் மற்றொரு உயிர்க்கூறான தாயகத்தை இழந்து நாம் அழிந்து கொண்டிருக்கிறோம்.

1833இல் கால்புறுக் ஆணைக்குழு அறிக்கை தமிழர் தாயகம் (தமிழீழம்) 26500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பாகும் என்று குறிப்பிடுகிறது.

1901இல் மாகாணப் பிரிவினையின்போது தமிழர் தாயகத்தில் இருந்து 7500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைப் பறித்துச் சிங்கள மாகாணங்களோடு இணைத்தார்கள். 1948இல் பிரிட்டிசார் வெளியேறியது தொடக்கம் வட்டுக்கோட்டைத் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் தந்தை செல்வா தனித்தமிழ்

ஈழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 1976 வரை - 27 ஆண்டுகள் தமிழர் தாயகத்தில் மேலும் 7500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைச் சிங்களர் குடியேற்றத்தால் பறித்தெடுத்தார்கள். தமிழர் தாயகமான

இலங்கை மக்கள் விடுதலை அடைந்ததாகக் கூறப்பட்டது. இலங்கையை விட்டு வெள்ளையர்கள் வெளியேறிய நிகழ்வு அது.

சிங்களவர் இலங்கைத் தீவில்



தமிழீழத்தில் மொத்தம் 15000 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை நாம் இழந்தோம்.

26500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்புக் கொண்ட நமது தாயகத்தில் - 15000 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை இழப்பதென்பது பாதிக்கு மேற்பட்ட தாயக மண்ணைப் பறிகொடுப்பதென்பதேயாகும்.

எஞ்சிய 11500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில்தான் 1976இல் தலைவர் வே. பிரபாகரன் ஆயுதம் ஏந்திய விடுதலைக்குப் போரை முன்னெடுத்தார்.

## தமிழீழமும் மலையகமும்

இலங்கைத் தீவில் 1948இல் பிரிட்டிசார் அரசு முடிவுக்கு வந்து -

பெரும்பான்மையாக இருந்ததால் - ஆட்சிபீடம் அவர்கள கையிலேயே சிக்கிற்று.

இலங்கைத் தீவின் முதல் தலைமை அமைச்சராக வந்த டி.எசு.சேனநாயக்கா இலங்கை வாழ் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கோடு - 1948இல் பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடிஉரிமை - வாக்குரிமை பறிக்கும் அழிப்பு நடவடிக்கையில் இறங்கினார்.

தமிழ்ப் பேராயக் கட்சியின் (தமிழ்க் காங்கிரசு) தலைவராக இருந்த ஜி.ஜி.பொன்னம்பலம் அளித்த மேலதிக ஒற்றை வாக்கால் மலையகத் தமிழர் (தேயிலை - இரப்பர் தோட்டங்களில் வாழ்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள்) குடி உரிமை - வாக்குரிமை பறிப்புச் சட்டம்

இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேறிற்று. தமிழீழ மக்கள் வெட்கித்தலை குனிந்த நாள் இந்நாளாகும்.




வழக்கறிஞர் ஜி.ஜி.பொன்னம்பலத்துக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

தமிழ்ப் பேராயக்கட்சியில் (தமிழ்க் காங்கிரசு) ஜி.ஜி.பொன்னம்பலத்துக்கு அடுத்த தலைவராக இருந்த தந்தை செல்வா அக்கட்சியை விட்டு வெளியேறி - 1949இல் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். தமிழீழ வரலாற்றில் ஜி.ஜி.பொன்னம்பலம் புரிந்த களங்கத்தைத் துடைக்கும் வகையில் தந்தை செல்வா மாபெரும் தலைவராய்த் தலைநிமிர்ந்தார்.

நான்கு கோரிக்கைகளைத் தந்தை செல்வா முன்வைத்தார்.

சிங்கள மொழிக்கு நிகராகத் தமிழ்மொழி சமஉரிமை பெற வேண்டும் - தமிழீழத்தில் சிங்களர் குடியேற்றம் நிறுத்தப் படவேண்டும் - மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை - வாக்குரிமை மீளவும் வழங்கப்பட வேண்டும் - ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு - கூட்டாட்சி அமைப்பின் கீழ் தமிழருக்குத் தன்னாட்சி நிறுவப் படவேண்டும். நான்கு கோரிக்கைகளையும் தமிழ் மண்ணின் நாற்றிசையும் அவர் மக்கள் முன் விளக்கினார். தமிழீழ மக்களின் ஒற்றைப் பெரும் கட்சியாகத் தேர்தலில் நின்று - வென்று - தன் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் துணையுடன் நான்கு கோரிக்கைகளையும் நாடாளுமன்றத்திலும் வலியுறுத்திப் போராடினார்.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கை சென்று தேயிலை - இரப்பர் தோட்டங்களில் ஏழைத் தொழிலாளிகளாக வாழ்ந்துவரும் மலையகத் தமிழர்களைத் தமிழீழ மக்கள் காட்டிக் கொடுத்தார்கள் - அவர்களின் காலை வாரினார்கள் - என்றெல்லாம் தவறான பரப்புரைகள் அவ்வப்போது தமிழ்நாட்டில் இடம் பெறுவதுண்டு.

இது மிகமிகத் தவறான இனஉடைப்பு வேலையாகும்.

அமைச்சர் ஆகிப்போன ஜி.ஜி.பொன்னம்பலம் செய்த இரண்டகம் தமிழீழ மக்கள் செய்த இரண்டகம் அன்று. சுடச்சுடத் தந்தை செல்வா மலையக மக்களுக்காகக் கட்சி தொடங்கினார் - மலையக மக்களுக்காகக் குரல் கொடுத்தார் - மலையக மக்களுக்காகப் போராடினார் என்பதே அசைக்க முடியாத உண்மை.

மலையகத் தமிழர்களின் தலைவரான தொண்டைமான் அவர்கள் மலையகத் தமிழர்களின் குடிஉரிமை - வாக்குரிமை பறித்த சிங்களவர்களின் தேசிய ஒற்றுமைக் கட்சியில் பலமுறை அமைச்சராக இருந்தார். ஆனால் - தமிழீழ மக்களின் தலைவரான தந்தை செல்வாவோ - அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களோ என்றுமே சிங்களவர்களின் தேசிய ஒற்றுமைக் கட்சி அரசிலோ - அல்லது பிற சிங்களக் கட்சிகளின் அரசிலோ அமைச்சர்களாக இருந்ததில்லை.

டட்லி - செல்வா உடன்படிக்கை ஏற்பட்ட போது - மாவட்ட அவை அதிகாரங்களுக்குச் சட்டவடிவம் கொடுக்கும் நோக்கோடும் - அதனைச் செயல்படுத்தும் நோக்கோடும் கட்சி உறுப்பினர் அல்லாத வழக்கறிஞர் திருச்செல்வம் அவர்களையே அமைச்சர் பதவி ஏற்கத் தந்தை செல்வா ஒப்புதல் தந்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இலங்கைத் தீவிலுள்ள தமிழர்கள் அனைவரதும் ஒற்றுமை முதல் தேவை என்று கருதிய தந்தை செல்வா மலையகத் தமிழர்களின் தலைவரான தொண்டைமான் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் பேராயக் கட்சியையும் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு) பின்னாளில் தன் தவற்றை உணர்ந்து தன்னைச் சிங்கள ஆட்சியாளரின் எதிரி ஆக்கிக் கொண்ட ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தமிழ்ப் பேராயக் கட்சியையும் (தமிழ்க் காங்கிரசு) தன்னுடைய தமிழரசுக் கட்சியுடன் இணைத்து 1972இல் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

( ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் மகன் குமார் பொன்னம்பலம் தந்தையைப் போலவே தலைசிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார் - பிற்காலத்தில் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் துணையாக இருந்தவர் - சிங்களப்படை வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு மாமனிதர் விருது வழங்கிச் சிறப்பித்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது. இன்று - குமார் பொன்னம்பலத்தின் மகன் வழக்கறிஞர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தமிழீழ விடுதலைப் போரில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் களமாடுவதைப் பார்க்கிறோம்).

மலையகத் தமிழர்கள் தந்தை செல்வா மீது அளவற்ற பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள். திருக்கோணமலையில் சிங்கள இனவெறியர்கள் பறக்கவிட்ட சிங்கக் கொடியை அவிழ்த்தெறிய கொடிக்கம்பத்தில் ஏறிய திருமலை நடராசன் சிங்கள வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டான். வண்டி ஒன்றில் இலக்கத்தகட்டில் இருந்த சிங்கள சிறீ எழுத்தைத் தார்பூசி அழித்த போது சிங்களக் காவலர்களால் பொகந்தலாவ தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த ஐயாவு - பிரான்சிஸ் என்ற இரு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தந்தை செல்வாவின் அறப்போராட்டக்காலத்தில் இந்த மூவரே விடுதலைக் களத்தில் மடிந்த அறப்போராளிகள் ஆவர். இவர்கள் மூவரும் மலையகத் தமிழர்களே.

மலையகத் தமிழர்களைச் சிங்கள இனவெறியர்கள் தாக்கும் போதெல்லாம் அவர்கள் தமிழீழ மண்ணை நோக்கியே ஓடிவருகிறார்கள். மன்னாரிலும் வன்னியிலும் மட்டக்களப்பிலும் இவ்வாறு ஓடிவந்த மலையகத் தமிழர் குடும்பங்களைக் குடியமர்த்தி - அவர்களுக்கு வாழ்வளித்தது தமிழீழம்.

தொடரும்...

# தமிழ்ப் பொங்கல்

பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.,

மெல்லிசையில் குயில்பாடும் மென்பூந் தெனறல்
மலர்த்தொட்டில் தனிலேதை மகளை இட்டு
வில்லென்னும் வளைபுருவம் தொட்டுக் கொஞ்சி
விண்ணசையும் மழைதன்னைச் சுட்டிக் காட்டும்
எல்லையென்னும் அணிமுறுவல் இதழில் பூக்க
எழிலாடும் விண்மீன்கள் தோற்றம் பார்க்க
எல்லையி(ல்)லா உவகையால் துள்ளும் உயிர்கள்
என்றென்றும் மகிழ்ந்திட பொங்... கட்டும் பொங்கல்!

உள்ளத்தே எழுகின்ற உவகை ஊற்றில்
உண்மையொளி காட்டுகின்ற விண்மீன் கூட்டம்
வெள்ளத்தே பாய்கின்ற மீன்கள் போல
விண்ணகத்தே பாய்ந்தோடி மகளைப் பார்க்கும்
அள்ளத்தான் நினைத்தந்த அழகு மான்கள்
அணைக்கத்தான் துடித்ததந்த அழியா மீன்கள்
பள்ளத்தே பாய்கின்ற புனலைப் போல
பன்மலரும் தைமகளைப் போற்றி பாடும்!

தேன்சிதறல் பேச்சினிலே மயக்கும் தென்றல்
தெள்ளமுதச் சிரிப்பினிலே நடுங்கும் மின்னல்
வான்பரவும் அழகினிலே நிலவும் துஞ்சும்
வளர்விழியின் முனைப்பினிலே அன்பு கொஞ்சும்
மான்விழிக்கும் தைஎன்ற மகளைக் கண்டே
மணிவிழிக்கும் இதழ்க்கடையின் சிவப்புக் கண்டே
தேன்சிதறி உள்ளமெ(ல்)லாம் குளிரச் செய்யும்
தைமகளே! தமிழனுடைய துயரைப் போக்கு!

எழுஞாயிறைத் தொழுதெழுந்து கனிவாய்ப் பேசி
இடர்யாவை யும் ஒழித்து இன்பம் பெருக
உழவரெ(ல்)லாம் ஒன்றிணையப் புதுமை நிறைய
தமிழ்மக்கள் வாட்டமெ(ல்)லாம் முற்றும் நீங்க
தரணியெங்கும் வளம்பெருகிச் சிறக்க தீயோர்
விழுவாரென முழங்கிநீ! எழுவாய் தமிழா!
வாழ்வாங்கு வாழஇனிதே! பொங்குக பொங்கல்!

பகைவரையும் நேசிக்கும் அன்பு வழியில்
பகுத்தெதையும் ஆய்ந்துவரும் அறிவொ ளியால்
மிகையான எளியரிடம் இரக்கங் காட்டி
மிகுதமிழர் இனமென்ற உணர்ச்சி ஊட்டி
தொகைபோட முடியாத உறுதி கொண்டு
தொலையாத கலையாத முயற்சி கண்டு
பகைதீய்த்துப் பண்புடனே மகிழ்ச்சி பொங்க
பொங்கட்டும் தமிழ்ப்பொங்கல் இன்ப மோங்க!

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் பேத்தி ரம்யா தமிழ்த் திரையுலகில் பல பாடல்களைப் பாடி வருகிறார். கர்நாடக இசையை 16 ஆண்டுகள் கற்றுக்கொண்டு சரியான அடித்தளம் அமைத்துக் கொண்டவர். பெண்கள் கிறித்துவக் கல்லூரியில் விஷூவல் கம்யூனிகேசன் படித்தவர்.

இசைஞானி இளையராஜா அவர்களின் இசையில் சாய்ந்து சாய்ந்து என்ற பாடலைப் பாடி, இசை ரசிகர்களை இவர் குரலின் பக்கமாய் சாய்ந்திடச் போன்ற முன்னணி இசையமைப்பாளர்களிடம் பாடியுள்ளார். கலைநிகழ்வுகளிலும் பாடி வருகிறார். இளந்தலைமுறையினர் அனைவரும் அறிந்த ஒரு திறமையான பாடகியாக வலம் வருகிறார் ரம்யா.

என்.எஸ்.கே. ரம்யா அவர்களுக்கு 2012 ஆம் ஆண்டு சிறந்த பாடகருக்கான விஜய் அவார்ட் கொடுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு ஃபிலிம் பேர் விருதும் இவருக்குக் கிடைத்துள்ளது. தனுஷ் படமான அனேகனிலும் பாடியுள்ளார். வளர்ந்து வரும்




செய்திருக்கிறார். எட்டு வயதிலேயே பாட தொடங்கிவிட்டவருக்கு இப்போது பல வாய்ப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன. இதுவரை பல பாடல்களைப் பாடியுள்ளார். டி. இமான், யுவன் சங்கர் ராஜா, கார்த்திக் ராஜா, விஜய்ஆண்டனி, ஜேம்ஸ் வசந்தன், தமன், ஹாரிஸ் ஜெயராஜ், ஜி.வி. பிரகாஷ்,

இளம் பாடகிகளுள் ரம்யாவுக்கு நிச்சயம் ஒரு நல்ல இடம் உண்டு என்பது அவரது திறமையின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

பிரகாஷ்

# உண்மையைத் தேடி... 7

இராஜாசிங்

இராசீவ் காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதாடிய வழக்கறிஞர்களில் ஒருவரான ஐயா செ. துரைசாமி அவர்கள், "ராசீவ் காந்தி கொலையில் மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டு உள்ளார். அதில், அந்த வழக்குகளின் கூடவே மற்ற செய்திகளையும் நிகழ்வுகளை ஆய்ந்து, கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளார். அவற்றை நாங்கள் ஒரு குழுவாகக் கூடி ஆராய்ந்து அவற்றிற்கான பதில்களையும் விளக்கங்களையும் பெற்றிருக்கிறோம்.

இவ்வாறு சாதாரண மக்களுக்கு புரிந்த உண்மைகள், வயதான அனுபவம் மிக்க நீதிபதிகளால் ஏன் உணர்ந்து கொள்ள முடியாமல் போனது. ஒரு வேளை அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளும் மிரட்டல்களும் இருந்ததா? தெரியவில்லை.

ஒரு கொலையைச் செய்யும் முன்பாக அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்று கூடி திட்டம் தீட்டி அதன் அடிப்படையில் செயலாற்ற வேண்டும். இதுவே கூட்டுச்சதி என்று கூறப்படும். உச்சநீதி மன்றமோ ராசீவ்காந்தி கொலை சதித்திட்டம், ராசீவ் காந்தி கொலை நடந்த அன்றே முடிவடைந்து விட்டது என்று தீர்ப்பு அளித்து உள்ளது. அதற்குப் பிறகு செய்த எந்த ஒரு செயலும் சதியின் தொடர்ச்சி அல்ல என்று அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் ரங்கநாதன் என்பவர் தொழில் நடத்தி வந்ததாகவும், தொழிலில் நட்டம் ஏற்பட்டு, தன் வீட்டின் ஒருபகுதியை வருமானத்திற்காக ராசீவ்காந்தி மரணம் அடைந்தபின் இலங்கை அரசால் அனுப்பப்பட்ட கூலிப்படைத்தலைவன் சிவராசனுக்கு வாடகைக்கு விட்டதாகவும் இதனால் ரங்கநாதன் என்ற தொழிலதிபர் கொலையில் கூட்டுச்சதியில் இணைக்கப்பட்டார். இக் கொலைக்கு முன் இவர்கள் சந்தித்துக் கொண்டதாக தகவல் இல்லை. மாறாக கொலை நடந்தபின்பு சந்தித்ததாகக் கூறுகின்றனர் விசாரணை அதிகாரிகள். அப்படி என்றால் அதிகாரிகள் நீதிமன்றத்தை ஏமாற்ற முயல்கிறார்கள் என்றுதானே பொருள். இப்படிப்பட்ட அதிகாரிகளை நீதிபதி பாராட்டுகிறார் சிறப்பாக விசாரணை செய்திருக்கிறீர்கள் என்று. உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் தவறு செய்தால் அவர்களுக்கு தண்டனை ஏதும் கிடையாதா?

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வணிகம் செய்ய வருவதற்கு முன், இந்தியா என்ற ஒரு நாடே கிடையாது. அது பல்வேறு சிறிய அரசுகளாகவும், திராவிட நாடாகவும், ஒரு சில பேரரசாகவும், குறுநில அமைப்பாகவும் இருந்தது. இந்தத் திராவிட பூமியில்தான் இன்று உள்ள இலங்கை என்னும் செழுமையான ஒரு நாடு இருந்தது. அதை சிறுபான்மையினரான பௌத்த மதவாதிகள் பிரித்துச் சென்று விட்டனர். அந்த திராவிடப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழர்கள் இருந்தனர்.

இன்றோ, பௌத்த மதவாதிகள் தமிழர்களை சிறுபான்மை மக்களாக மாற்றி, தமிழர்களை அழித்து இலங்கையை பௌத்தநாடாக ஆக்கி வருகின்றனர். இதை தமிழர்களாகிய நாம் ஒன்றிணைந்து தடுத்திட வேண்டும். இல்லை என்றால் நாளை இந்தியாவில் உள்ள தமிழனுக்கும் இதே நிலைதான் ஏற்படும். 1947ஆம் ஆண்டுக்குப் பின் உருவான இந்தியாவில் தமிழன் சிறுபான்மைமை இனத்தவனாகவே உள்ளான்.

எங்கோ பிறந்து, கைபர் போலன் கணவாய் வழியாக நமது நாட்டுக்குள் நுழைந்த ஆரியர்கள் தமிழனுடைய அறிவு,

ஆளுமை, வீரம், பரிவு இவற்றிற்கு முன் ஈடு கொடுக்க முடியாமல், திராவிட பூமியில் திராவிடர்களை அடிமைப்படுத்தி திராவிடர்களின் அறிவை ஆள ஆரம்பித்து விட்டான். பெரியார் போன்றவர்கள் திராவிடர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுத்து, அனைவரும் சட்டை அணியும் உரிமையையும் அனைவரும் சமமாய் வாழும் உரிமையையும் பெற்றுத்தந்து எல்லோரும் சரிசமமாய் வாழ்வதற்கான சூழலைப் பெற்றுத்தந்தார். நாம் அவரை மறப்பதும் அவரைப்போன்றவர்களை மறப்பதும் பெற்ற தாயை மறப்பதற்குச் சமமாகும்.

பெரியார் மண்ணின் மைந்தர்களை எதிர்க்கவில்லை, வழிநடத்தினார். வந்தேறிகளான ஆரியர்களைத்தான் எதிர்த்தார். இங்குள்ள கடவுளை பெரியார் எதிர்க்கவில்லை. ஆரியர்கள் திணித்த கடவுள்களைத்தான் எதிர்த்தார். திராவிடர்களின் புராணங்களுக்கும் காவியங்களுக்கும், ஆரியர்களுடைய புராணங்களுக்கும் காவியங்களுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. திராவிடத்தில் நீதி என்பது ஆண்டவனுக்கும் அடிமைக்கும் ஒன்றுதான். அறம் மட்டுமே



வெல்லும். உதாரணம் - சிலப்பதிகாரம்.

ராசீவ் காந்தியைக் கொன்று அப்பழியை அபாண்டமாக தமிழக மக்கள் மீது திணித்து, ராசீவ் காந்தியைக் கொன்றது தமிழர்கள் தான் என்று பல அரசியல்வாதிகள் கூறினார்கள். முன்னாள் பாரதப்பிரதமர் வாஜ்பாய் தேர்தல் பரப்புரைகளில் காங்கிரஸ், ராசீவ் காந்தியைக் கொன்றவர்களுடன் கூட்டணி வைத்துள்ளது என்றார். அதற்கு கலைஞர் "வாஜ்பாயை மிகவும் நல்லவர் என்று நம்பினேன்" என்று கூறினார். அதற்குப் பிறகு அவர் எதுவும் பேசவில்லை. தமிழனை குற்றவாளி என்று சொன்னவருக்கு பாரத ரத்னா விருது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பவன் வெற்றி பெற வாழ்த்துகள்? வெற்றி பெறுவதற்கான ஆதரவுகள் இதுதான் இந்தியாவின் நிலையாக இருக்கிறது. தமிழகத்தில் நடப்பவைகள் தமிழர்களை நசுக்கும் செயல்பாடுகளாகத்தான் நமக்குத் தெரிகிறது. திராவிடப் பூமியில் தமிழ் இனத்தையும், தமிழர்களுடைய பண்பாடு, நாகரிகம், வரலாற்றுச் சின்னங்கள் முதலியவற்றை அழித்து, ஆரியத்தை தோற்றுவிக்க முயல்வது அப்பட்டமாகத் தெரிகிறது.

தாய்மதத்திற்கு திரும்ப வேண்டும்



என்று கூறப்படுகிறது. தாய்மதம் திராவிட மதம்தானே! ஆடு, மாடு, கோழி, பன்றி, இவற்றை பலியிட்டு இயற்கையைத்தான் வழிபட்டனர். அதையே திரும்பவும் செய்ய வேண்டியதுதானே. ஆனால் அதை விடுத்து ஆரியர்கள் உருவாக்கிய இடைச்செருகல் கடவுள்களை வணங்கச் சொல்வது தமிழர்களை அடிமைப்படுத்துவதாகாதா? அன்று பசுவதைத் தடைச்சட்டம் ஆரியர்களை மகிழ்விப்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. இன்று சல்லிக் கட்டு நிறுத்தப்பட்டுள்ளது, இது ஆரியர்களை உற்சாகப்படுத்த. கோட்சேவுக்கு சிலை வைக்கப் போகிறார்களாம், ராசீவ் காந்தியைக் கொன்ற ஒற்றைக்கண் சிவராசனுக்கும் சிலை வைப்பார்கள் போலும்.

பெரியார் கொள்கையில் பற்று ஏற்பட்டு அவரைப் பின்பற்றிய குயில்தாசனின் மகனை கொலைக்குற்றத்தில் சேர்த்தனர். சேர்த்தவர்கள் யார்? விசாரித்த ஆரிய அதிகாரிகள், வாதாடிய ஆரிய வழக்கறிஞர்கள். பலருக்குப் புரிந்திருக்கும், ராசீவ் காந்தி கொலையில் ஏன் விடுதலைப்புலிகள் மற்றும் தமிழர்கள் சேர்க்கப்பட்டனர் என்று.

மேலும் இன்றைய அரசு ராசீவ் காந்தி கொலையை விசாரித்த அதிகாரிகளை விசாரிப்பார்களாயின் பல உண்மைகள் வெளியே வரும். காங்கிரஸ்காரர்கள், ராசீவ் காந்தி கொலையில் புதைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக்கொணர முயற்சி செய்வார்களானால் உண்மையான குற்றவாளிகள் யார் என்பது விளங்கும். கார்த்திகேயன் ராசீவ் காந்தி படுகொலை என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். அதில் இன்றைய காங்கிரஸ் தலைவர் என வர்ணிக்கப்படுபவரைப் பற்றி இரட்டை அர்த்தத்தில் மோசமாக விமர்சித்துள்ளார். இதெல்லாம் தெரிந்தும் ஏன் காங்கிரஸ்காரர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்றுதான் புரியவில்லை. ஒருவேளை, கேவலமாகச் சித்தரிக்கப்படுவதும், வசைபாடப்படுவதும் தலைவரைத்தானே நமக்கென்ன என்ற பரந்த எண்ணத்தில் இருக்கிறார்களோ என்னவோ?

தொடரும்...

# கள்ளர்க்கும் கண்ணிய வாழ்வு

அறமுடைய வாழ்வினையே ஏற்று விட்டால்
அனைவருமே இன்பமுடன் வாழலாமே:
புறங்கூறல் விட்டுவிட்டால் வாழ்வில் நாளும்
புதியதொரு நண்பரையே அடைய லாமே:
பறவைக்கோ உணவளித்துப் பழகி விட்டால்
பந்தமுடன் நமைத்தேடி நாளும் வருமே:
உறவுகட்கோ உதவிட்டால் நன்றி கொண்ட
உளம்நிறைந்த வாழ்த்துக்களைப் பெற்றி டலாமே.

மரங்களையே வளர்த்துவந்தால் பருவம் எல்லாம்
மழைநீரும் குறையாமல் கிடைக்கு மிங்கே:
வருகின்ற விருந்தினரை விரும்பி ஏற்றால்
வாழ்நாளில் நற்புகழை எய்த லாமே:
தருகின்ற நல்லோர்கள் பெருகி விட்டால்
தரணியிலே ஏழ்மையினை விரட்ட லாமே:
பருகுகின்ற நீரதுவும் தூய்மை என்றால்
பலவாண்டு நோயின்றி வாழ லாமே.

தலைவர்கள் திருந்தியிங்கேமாறி விட்டால்
தப்பாமல் நல்லாட்சி மலரு மிங்கே:
விலைவாசி ஏறாமல் இருந்து விட்டால்
விருப்பமுடன் பல்லோர்க்கும் பொருள்கிட் டிடுமே:
கலைகளிலே மனதினையே கொடுத்து விட்டால்
களிப்புடனே நாள்களுமே நகரு மிங்கே:
கொலைஞர்கள் தண்டனையும் பெற்று விட்டால்
குற்றங்கள் மக்களிடை குறையு மிங்கே.

வள்ளுவத்தை நன்முறையில் ஏற்று விட்டால்
வளமான வாழ்வதுவும் மலர்தல் உண்டே:
கள்ளருந்தல் ஒழிந்துவிட்டால் பெண்கள் சிந்தும்
கண்ணீரும் நம்நாட்டில் குறையு மிங்கே:
உள்ளங்கள் உயர்வாக அமைந்து விட்டால்
உலகமெங்கும் வேற்றுமைகள் மறைவ துண்டே:
கள்ளர்கள் நல்லதொழில் கற்று விட்டால்
கண்ணியமாய் அவர்வாழ்வும் அமையும் நன்றே.

கவிஞர் இராம. பரஞ்சோதி.

# வெளிநாடுகளுக்கு செல்லும் இந்திய கருப்பு பணம் 9 மடங்கு அதிகரிப்பு

**வா**ஷிங்டன், டி.ச.17- 2003 முதல் 2012 வரையிலான 10 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் கருப்பு பணம் 9 மடங்கு அதிகரித்திருப்பதாக அமெரிக்க ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் முடங்கியுள்ள இந்தியர்களின் கருப்பு பணம் விவகாரம் தீவிரமான அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்த பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் கருப்பு பணம் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது.

சுப்ரீம் கோர்ட்டில் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் கருப்பு பணம் தொடர்பாக வழக்கு நடந்து வருகிறது. ஜெனீவா எச்.எஸ்.பி.சி.வங்கி கிளையில் மட்டும் இந்தியர்களின் கருப்பு பணம் ரூ.4,479 கோடி உள்ளதாக கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனமான உலக நிதி நிலை என்ற நிறுவனம் வளர்ந்த நாடுகளில் இருந்து வெளிவரும் கள்ளத்தனமான நிதி என்ற தலைப்பில் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளுக்கான கருப்பு பணம் பற்றிய



தகவலை அது வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

2003ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற கருப்பு பணம் 10.17 பில்லியன் (ஒரு பில்லியன்

என்பது நூறுகோடி) அமெரிக்கடாலர், அன்று இந்திய மதிப்பில் இது சுமார் ரூ.40 ஆயிரம் கோடியாக இருக்கும். 2012-ல் இந்தத் தொகை 94.76 பில்லியன் அமெரிக்க டாலராக, இந்திய மதிப்பில் சுமார் ரூ.6 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இது டாலர் மதிப்பில் 9 மடங்காக இருந்தாலும் இந்திய மதிப்பில் பார்த்தால் 15 மடங்கு வருகிறது.



2004ஆம் ஆண்டு 19.41 பில்லியன் அமெரிக்க டாலரும், 2005ஆம் ஆண்டு 20 பில்லியனும், 2006ஆம் ஆண்டு 28 பில்லியனும், 2007ஆம் ஆண்டு 34.6 பில்லியனும், 2008ஆம் ஆண்டு 47.1 பில்லியனும், 2009-ம் ஆண்டு 29 பில்லியனும் (திடீர் சரிவு),




2010ஆம் ஆண்டு 70 பில்லியனும், 2011ஆம் ஆண்டு 86 பில்லியனும் வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் என்ன கொடுமை என்றால், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் கடினமாக உழைத்து இந்தியாவுக்கு அனுப்பும் பணத்தை விட இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குப் போகும் கருப்பு பணம் இப்போது அதிகரித்து இருப்பது தான். 2003ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த பணம் 16.39 பில்லியனாக இருந்தது. வெளியே சென்று கருப்பு பணம் 10.17 பில்லியன் தான்.

உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையில், 2014ஆம் ஆண்டு இந்தியாவுக்கு அனுப்பப்படும் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பணம் 71 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு கருப்பு பணத்தை அனுப்புவதில் இந்தியா 4-வது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் சீனாவும், 2-வது இடத்தில் ரஷியாவும், 3-வதாக மெக்சிகோவும், 4-வதாக இந்தியாவும், 5-வதாக மலேசியாவும் உள்ளன.

ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு ஆண்டும் வெளிநாடுகளுக்குச் செல்லும் கருப்பு பணம் சராசரியாக 9.4 சதவீதம் அதிகரித்து வருகிறது. இப்படி வெளிநாடுகளுக்குச் செல்லும் கருப்பு பணம் ஏற்கனவே அனைத்து அந்நிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை விட அதிகமாக உள்ளது என்று அந்த அமைப்பின் தலைவர் ரேமாண்ட் பாக்கர் கூறியுள்ளார்.

பொன்முடி

# பள்ளி விழா





மிக அழகிய பாதுகாப்பான வளாகத்தில் பச்சைப் பசேல் என்று ஓங்கி நிற்கும் மரங்களின் நடுவே புனித தோமையர் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது C.S.I. ST.THOMAS MARICULATION HIGHER SECONDARY SCHOOL. கடந்த மாதம் 2 ஆம் தேதி அன்று இப்பள்ளியின் வாயில்கள் கொண்டாட்ட குதூகலத்துடன் தென்பட்டதால் உள்ளே நுழைந்தோம். அங்கே மாணவர்களும் ஆசிரியர்களும் மகிழ்வுடன் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தனர். எல்லோரும் நீல வண்ணத்தில் உடை உடுத்தியிருந்தனர். நீல விளக்குகள், நீல வண்ணப் பூக்கள், கடற் கன்னி, மீன்கள், கடல் மற்றும் நீர்வாழ் உயிரினங்களைப் போன்ற உடைகளுடன் சிறுவர் சிறுமியர் துள்ளித் திரிந்தனர். விசாரித்தோம். நாங்கள் எங்கள் பள்ளியின் ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம் என்றார்கள். ஏன் எல்லோரும் நீல வண்ணத்தில் இருக்கிறீர்கள் என்ற நமது அடுத்த வினாவிற்கு, “இந்த ஆண்டின் கருப்பொருள் தண்ணீர்” என்றனர்.

இப்பள்ளியைப் பற்றி அங்கே குழுமியிருந்த மாணவர்களின் பெற்றோர்களிடம் பேசினோம். “இந்தப்



பள்ளியில் நாங்கள் செலுத்தும் கட்டணம் மிகவும் குறைவுதான். இங்கே அரசு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஆனால் கல்வியின் தரம் உயர்வானது. ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு மிகச்சரியாகக் கடைபிடிக்கப்படுகிறது. பள்ளியின் முதல்வரும் ஆசிரியர்களும் ஒவ்வொரு பிள்ளைகள் மேலும் எடுத்துக் கொள்கிற தனிக்கவனம் மற்ற பள்ளிகளில் காண முடியாதது. எங்களது பிள்ளைகள் பள்ளிச்சூழலில் படிக்கிறார்கள் என்பதை விட குடும்பச்சூழலில் படிக்கிறார்கள் என்பதே உண்மை. விளையாட்டிலும் (SPORTS) இணைச் செயல்பாடுகளிலும் (CO - CURRICULAR ACTIVITIES) முழு ஆளுமை வளர்ச்சியிலும் (PERSONALITY DEVELOPMENT) மொழித்திறனிலும் (SPOKEN LANGUAGE) இறைச்சிந்தனையிலும் (SPIRITUAL DEVELOPMENT) பாடத்திட்டத்தைக் கடந்து தொடர்ந்து கற்கும் திறன் (CONTINUAL LEARNING) ஆகியவற்றை எங்கள் பிள்ளைகளுக்கு இப்பள்ளி அளித்து வருவது எங்களுக்கு மன நிறைவைத் தருவதாக அமைந்துள்ளது என்று கூறினார்கள்.




நிகழ்ச்சிகள் துவங்கின. பள்ளியின் தாளாளர் திருமதி லெனோரா ஜேம்ஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று மாணவர்களைப் பாராட்டினார். பள்ளியின் முதல்வர் திருமதி விமலா ஏஞ்சலினா அவர்கள் பள்ளியின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். மேலும் அவர் பேசுகையில் கல்வி என்பது ஒரு மனிதனை நிறைவுள்ளவனாக்கும் ஆயுதம். கடவுள் மனிதனுக்கு கொடுத்திருக்கும் வெகுமதிகளில் முக்கியமானது அவனது அறிவு மற்றும் படைப்புத்திறன். மாணவர்கள் எவ்வளவு அதிகமாக தன்னைச் சுற்றி உள்ள காரியங்களை உற்று நோக்கி, புரிந்து கொண்டு தன் வயப்படுத்திக்கொள்கிறார்களோ அவ்வளவு தெளிவை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். ஆகையால் அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களாகிய நாம் நமக்குக் கிடைத்திருக்கின்ற வாய்ப்புகள், வளங்கள் மற்றும் ஆதாரங்களை மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பதற்கு பயன்படுத்த வேண்டியது நமது முக்கியக் கடமையாகும் என்றார்.

அதிக மதிப்பெண்கள் எடுத்த பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவியருக்கும், நூறு விழுக்காடு தேர்ச்சியைப் பெற உதவி புரிந்த ஆசிரியர்களுக்கும் பரிசுகள் கொடுத்து பள்ளி முதல்வர் பாராட்டினார். மாநில அளவில் விளையாட்டு மற்றும் கலை இலக்கியப் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு கேடயமும் பரிசும் வழங்கிச் சிறப்பித்தார். சி. எஸ். ஐ. பெயின் பள்ளியின் முதல்வர். திருமதி ஷ்யாமளா சுரேஷ் அவர்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டிப் பேசினார்.

பள்ளியின் பாடகர் குழு பாடல்களைச் சிறப்பாகப் பாடி பெற்றோர்களையும் விருந்தினர்களையும் இசை வெள்ளத்தில் ஆழ்த்தினர். பள்ளியின் ஆசிரியர் பிரதிநிதி நன்றியுரை நல்க பள்ளியின் ஆண்டுவிழா இறைவன் இயேசுவின் அருளுடன் வட்டாரப் போதகர் மேதகு சசிகலா லாரண்ஸ் அவர்கள் இறை ஆசி வழங்க இனிதே நிறைவடைந்தது.

# கோழி மீன் எலும்புகளை நீக்கும் ரோபோ

மனிதர்கள் விரும்பிச் சாப்பிடும் இறைச்சி வகைகள் மீன்-கோழிகள், ஆனால் இவற்றை பக்குவப்படுத்தி சமைப்பது கொஞ்சம் சிரமமான வேலை. அதனால்தான் இறைச்சிக் கடைகளில் காத்து நின்றாவது வகைப்படுத்திய இறைச்சியை வாங்கி எளிதாக சமைக்க ஆசைப்படுகிறோம்.



இறைச்சிக் கடைகளில் அதிக அளவில் கோழிகளையும், மீன்களையும் பக்குவப்படுத்தித் தர இதுவரை மனித உழைப்பையே நம்பி இருக்கிறோம். சில இடங்களில் கோழிகளின் இறகுகளை பிரித்தெடுப்பதற்கு எந்திரத்தைப் பயன்படுத்துகிறார்கள். தற்போது கோழிகளின் இறகுகளை பிரித்தெடுப்பதுடன், தோல், நீக்கி தசை இறைச்சி, எலும்பு இறைச்சியை தனித்தனியே பிரித்து எடுக்கவும் ரோபோ வந்துவிட்டது.

நார்வேயில் சைக்கிள் என்னும் பல்வேறு பயனுள்ள தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 'சின் டெப்' எனப்படும் பொறியாளர்கள் குழு கோழி இறைச்சியை பிரித்தெடுக்கும் கிரிப்போட் எனப்படும் ரோபோவை உருவாக்கி உள்ளனர்.

கிரிப் என்பது அந்த நாட்டில் உள்ள ஒரு வகை கழுகு இனமாகும். இந்த எந்திரத்தில் இருக்கும் கழுகின் அலகுபோன்ற அமைப்புகள், கோழியை பற்றிப் பிடித்துக் கொள்கின்றன. கேமராவின் உதவியுடன் துல்லியமாக எங்கெங்கு இறகுகள் இருக்கின்றன என்பது உணரப்பட்டு அகற்றப்படுகின்றன.

பின்னர் தோலின் வளவளப்பு தன்மையை முப்பரிமாண வடிவில் அறிந்துகொண்டு இறைச்சியையும், எலும்புகளையும் தனித்தனியே பிரித்து எடுக்கிறது.

சின்டெப் ஆராய்ச்சிக் குழுவினர் இதுபோலவே மீன் முட்கள், எலும்புகளை அகற்றவும் ஏற்கனவே ரோபோவை வடிவமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தங்கள் ரோபோக்களால் உணவு உற்பத்தித் துறையில் பெரும் மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

ஜோஸ்வா

# சீன வானொலியில் தமிழ்

சீனாவில் உள்ள அரசு வானொலியில் 1963 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நிகழ்ச்சிகள் ஒபிரப்பாகின்றன. இதற்காக செயல்படுகிற வானொலி நிலையத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் பெரும்பாலும்




தமிழ் பேசும் சீனர்களாகவே இருக்கின்றனர். குறிப்பாக இதில் பணியாற்றி வருகிற லியாவோ லியாங் என்ற 25 வயது பெண் தொகுப்பாளர், சரளமாக தமிழ் பேசி நிகழ்ச்சியை நடத்தும் பாங்கு அனைவரையும் கவர்வதாக உள்ளது. அவர் அந்த வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளை பூங்கோதை என்ற பெயரில் தொகுத்து வழங்குகிறார். சீன கலாச்சாரத்திற்கும் தமிழ் கலாச்சாரத்திற்கும் அவர் பாலமாக விளங்குகிறார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு நேர்காணல் அளித்த பூங்கோதை, மிகுந்த ஆர்வத்துடன்தான் நான் தமிழ் மொழியைக் கற்றேன். கடினமான இலக்கணங்களுடன் கூடிய மொழி தமிழ் என்பதை நான் அறிவேன். ஆனாலும் தமிழைக் கற்க விரும்பினேன். எனவே ஒரு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொண்டேன். அங்குள்ள இந்தியாவைச் சேர்ந்த தமிழாசிரியர், எனக்கு தமிழில் பெயர் சூட்டினார். அதிலிருந்து என் தமிழ்ப்பயணம் தொடங்கியது என்று கூறினார்.

அமல்ராஜ்

## இணையதள அடிமைகளுக்கான பள்ளி!

இணையதள வசதியுடன் கூடிய நவீன செல்போன்கள் இளைய தலைமுறையினரை நகரவிடாமல் கட்டிப்போட்டு வருகின்றது. தாங்கள் விரும்பும் தகவல்கள் அனைத்தும் உள்ளங்கையிலேயே கிடைத்து விடுவதால், டீன்-ஏஜ் எனப்படும் பருவ வயதினர் செல்போன் மற்றும் இணையதளமே கதி என முடங்கிக் கிடப்பதாக ஆய்வுகள்



தெரிவிக்கின்றன. அந்த வகையில் ஜப்பானில் மட்டும் கடந்த ஆண்டு சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் டீன்-ஏஜ் பருவத்தினர் பள்ளிக்குப் போகாமலும், பிற மனிதர்களைச் சந்திக்காமலும் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதாக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த இணையதள அடிமைகளை மீட்பதற்காகவும், அவர்கள் படிப்பை தொடர்வதற்காகவும் பள்ளி ஒன்றை தொடங்கத் திட்டமிட்டு உள்ளனர்.

டோக்கியோவின் புறநகர் பகுதியில் அமைய உள்ள இந்தப் பள்ளியின் நோக்கமே, ‘உங்கள் ஸ்மார்ட் போனே உங்கள் பள்ளியறை’ என்பதாகும். இத்தகைய இணையதள அடிமைகளுக்கு, ஸ்மார்ட் போன் மூலமே மேற்படிப்பை இந்தப் பள்ளி வழங்கும்.

2015ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்க இருக்கும் இந்தப் பள்ளியில் 300 மாணவர்களைச் சேர்க்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. ஆனால் தற்போது இதற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசாரணைகள் வந்துள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்து உள்ளனர்.

உமாமகேசுவரி.

# தமிழா! தமிழை, தமிழனை அரியணையில் ஏற்று!

கவிமுகில். இராம. முத்துக்குமரனார்

மொழி என்பது அதைப்பேசும் நாட்டின், பண்பாட்டின் அடையாளம். அங்குள்ள தன் ஊற்றுக்கண், பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களை தன்னுள் பாதுகாத்து வைத்திருக்கும் பெரிய கருவூலம். அந்த வகையில் கி.மு.10,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தவன் உலகிற்கு நாகரீகத்தைக் கற்றுத் தந்தவன் தமிழன் அத்தகைய தமிழன் தோன்றிய இடம் இலமூரியா எனும் நிலப்பகுதியைக் கொண்ட குமரிக்கண்டம் ஆகும். இலைமூ என்றால் உயிர் என்று பொருளாகும் இத்தகைய குமரிக்கண்டத்தில் தோன்றிய வளர்ந்த தமிழன் பேசியமொழி தமிழாகும். தமிழன்தான் உலகின் முதல்மாந்தனும் ஆவான்.

கி.பி.ஆறாம் நூற்றாண்டில்தான், அதாவது இன்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு ன்தான் தமிழிலிருந்து மற்றைய திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவை பிரிந்தன என்று மொழியியல் அறிஞர்கள் சொல்கின்றனர்.

இன்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்பே நமது தொல்காப்பியம் எனும் இலக்கணநூல் இருந்ததாக நாம் அறிய முடிகின்றது. இதைக் காணும் போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும்.

ஏனென்றால் இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பது மரபாகும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியங்கள் சிறப்புடன் இருந்துள்ளதால்தான் “தொல்காப்பியம்“ எனும் இலக்கண நூல் தோன்றியுள்ளது என அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். அந்த வகையில் மிகவும் பழமையான மொழி நமது தமிழ்மொழியாகும்.

உலகில் முதலில் தோன்றிய இலக்கண நூல் நமது தொல்காப்பியமாகும்.

இதுபோல் உலக பொதுமறையாய் விளங்கிவரும் திருக்குறள் தமிழின் மேன்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளது. சமயம், இனம், மொழி நாடுகடந்து உலகமாந்தர் அனைவருக்கும் ஏற்றவாறு அவர்கள் போற்றும் வகையில் அமைந்துள்ளது.

உலகின் முதல் பொருளாதார நூல்தான் திருக்குறள். பெண்மையைப் போற்றிய நூல் திருக்கிறள். அன்றைய முடியாட்சி தொடங்கி, இன்றைய மக்களாட்சிவரை அரசு எவ்வாறு இருக்க வேண்டும், அரசை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்திய நூல் திருக்குறளாகும்.

அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் என சங்க கால நூல்கள் பலதந்து தமிழின் பெருமையினை உலகிற்கு உணர்த்தியவன் தான் தமிழன்.

அப்படிப்பட்ட தமிழன் இன்று தமிழைப் பேச வெட்கப்படுகின்றான் தமிழைப் புறந்தள்ளி ஆங்கிலத்தில் பேசி மகிழ்கின்றான்.

“சேமமுற” வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர். என்றான் எட்டயபுரத்து முண்டாசுக் கவி பாரதி

“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்“ என்று முழக்கமிட்டவன் பாரதி. ஆனால் தமிழ்நாட்டில் ஆங்கிவ மோகம் அதிகரித்து வருகின்றது. தமிழ்மொழியின் பயன்பாடு குறைந்து வருகின்றது.

இந்நிலையை அறிந்தப் பாவேந்தர் பாரதிதாசன் கூறுகின்றபோது

“மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை? தோப்பில் நிழலா இல்லை

தனிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தானில்லை"

என்று வேதனைப்பட்டார் பாவேந்தர் பாரதிதாசன். இதைவிட இன்று மிகப் பெரும் வேதனை வழிபடும் கோயில்களில் தமிழ்மொழி இல்லை. வழக்காடு மன்றங்களில் தமிழ்மொழி இல்லை, வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை தமிழில் இல்லை, பாடும் இசைமொழிகூட தெலுங்கில்தான் கீர்த்தனை அரசு அலுவலகங்கள் செயல்பாடுகள் தமிழில் இல்லை. அனைத்து அலுவலகங்களிலும் ஆங்கிலமே ஆட்சிமொழி. தமிழ் பேச்சு மொழியாய்க் கூட அங்கு இருப்பதில்லை. தமிழன் தன்பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுவது இல்லை, பிறத்தமிழனுக்கு இடர்வரும்போது தமிழ் உணர்வு வருவதேயில்லை. மொத்தத்தில் இப்போதைய தமிழன் தமிழனாக வாழவில்லை.

இன்றும் சீனாவில் அவர்கள் பிள்ளைகளுக்கு சீன மொழியில்தான் பெயர்சூட்டுகின்றனர். பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஜப்பானியர்கள், ரஷ்யர்கள், ஆங்கில மொழி வாடையின்றி தமது தாய் மொழியில்தான் அறிவியல் சாதனை செய்துள்ளனர். அதைப் பெருமையாகவும் கருதுகின்றனர்.

ஆங்கிலம் பேசுவதையே பெருமையாகக் கருதும் தமிழன் பிற நாடுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். தொழில் வளர்ச்சியில் மிகப்பெரிய நாடு ஜப்பான் இங்குள்ள தொழில்நுட்ப பேராசிரியருக்கு ஐந்து நிமிடம் கூட தொடர்ந்து ஆங்கிலம் பேசத் தெரியாது. தமது தாய்மொழியில்தான் உரையாடுவார்.

நாம் நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியில் பேசுவதைத் தவிர்த்து ஆங்கிலம் பேசுவதை மிக உயர்வாக கருதுகின்றோம்.

ஒருமொழி அதைப் பேசும் மக்களால் பல தலைமுறைகள் தொடர்ந்து அலட்சியப்படுத்தப்படும்போது அந்த மொழி மாத்திரம் அழிந்து போவதில்லை அதை தாய்மொழியாகக் கொண்ட ஒட்டு மொத்த இனமே அடையாளமின்றி போகின்றது இதுதான் நமக்கு வரலாறுகள் காட்டும் உண்மையாகும்.

ஹோமர், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மாமேதைகள் பிறந்த மனித நாகரீகத்தின் தொட்டில் என்று அழைக்கப்பட்ட கிரேக்கப் பூமியில் பேசப்பட்ட கிரேக்க மொழி இன்று பேச்சு வழக்கில் இல்லை.

ரோமப் பேரரசின் எழுச்சியில் திளைத்து பதினேழாம் நூற்றாண்டுவரை மக்கள் மத்தியில் பேசப்பட்டு மிக உயரத்தில் இருந்த லத்தீன் மொழி இன்று இல்லை.

இவற்றையெல்லாம் சங்கத்தமிழ் வளர்த்த தமிழனின் வழித்தோன்றலாகிய இன்றையத் தமிழன் உணரவேண்டும் இனியாவது நம் உயிரினும் மேலான தமிழ்மொழியினை பேணிப் பாதுகாத்திடல் வேண்டும்.

"தமிழினைப் போல் உயர்ந்தமொழி தரணியில் வேறெங்குமில்லை" என்று முழங்கினார்

தமிழ்த் தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரம் அவர்கள். அவரே இன்றையத் தமிழனின் நிலையினை எண்ணி வளம் வருந்தினார்.

தமிழனைப் போல் மொழிக்கொலையில் தலைசிறந்தோர் எவருளரோ? என்றார்

அன்றைய நிலைதான் தமிழகத்தில் இன்றும் நீடித்து வருகின்றது ஆங்கிலத்தில் பேசுவதையேப் பெருமையாக இன்றையத் தமிழன் நினைக்கின்றான்

கூலி வேலை செய்து அன்றாடம் உணவிற்கு அவதிப்படும் தமிழன் கூட தன்பிள்ளைகளும் பிறரைப்போல் ஆங்கிலப்பள்ளியில் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றான்.

தன்னை "டாடி" என்றும் தன் மனைவியை "மம்மி" என்றழைக்க வேண்டும் என விரும்புகின்றான். இன்றைய பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்களை தமிழர்கள் அதிகம் கலந்து பேசுகின்றனர்.

இன்றைய ஊடகங்கள் பெரும்பாலும் தமிழை பெருமளவில்

சிதைத்து ஆங்கிலத்தில் கலந்து பேசுவதையே பெருமையாகக் கருதுகின்றன.

ஒருசில நாளிதழ்கள், மாத இதழ்களைத் தவிர்த்து மற்றைய இதழ்கள் பிறமொழிச் சொற்களை பெருமளவில் கலந்தே எழுதுகின்றன.

தமிழில் முடியாதது வேறு எந்த மொழியிலும் முடியாது என உறுதிபடக்கூறியவர் நமது தமிழறிஞர் பாதிமாற்கலைஞர்.

மேலும் "அணுவைப்" பிளக்கலாம் என்று சில ஆண்டுகளுக்கு முன்தான் வெளிநாட்டவர் ஆகாயத்துவங்கினர். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே" கவிச்சக்கரவர்த்தி" கம்பர் எனும் மகாகவி "தூணிலும் உளன் - அணுவை சதக் வறிட்ட கோணிலும் உளன்" எனத் தாம் இயற்றிய இராமாயணத்தில் கூறியுள்ளார்.

அணுவை நூறாகப் பிளந்து அந்த நூற்றில் ஒருபங்கு பகுதிக்கு "கோண்" என்றும் கம்பர் பெயரிடுகின்றார். இதன்மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே அறிவியலை உணர்ந்தவன் தமிழன் என்பதை உணர்கின்றோம்.

இன்றையத் தமிழன் உலக அறிவியலை தமது தாய்மொழித் தமிழில் கற்க அஞ்சுகின்றான், பிறமொழியின் துணையை நாடுகின்றான்.

தகுதி மிகுதியை வெல்லும் என்றொரு விதி உண்டு அதன்படி உலகமொழிகள் அனைத்தையும் தனது ஒப்பற்ற ஆற்றலால் வென்ற தமிழ்மொழி, செம்மொழி என்று பெருமையாய் பேசப்படும் மொழி நமது தாய்மொழியாகியத் தமிழ் மொழியாகும்.

ஆனால் இன்றைய இளைய சமுதாயம் தமிழைப் புறக்கணிப்பது மட்டும் அல்லாது தமிழில் சிந்திப்பதையும், எழுதுவதையும், பேசுவதையும், தங்களுக்கு தரக்குறைவாக கருதுகின்றனர்.

வீரத்தோடு களம் புகுந்து வெற்றிபலக்கண்ட பழந்தமிழ் மறவனை எண்ணுதல் வேண்டும். தமிழும் தமிழனும் உயர வேண்டும் என்றால் தமிழ் மொழி மீது பற்றுள்ள தமிழரே தமிழ்நாட்டை ஆள்தல் வேண்டும்.

வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாட்டில்
தமிழ்தான் வாழவழியின்றி தவிக்கின்றது
இன்றைய தமிழனும் பிறநாட்டினரால் விரட்டப்பட்டு
வாழ வழியின்றித் தவிக்கின்றான்.
கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை: மொழியையும், நாட்டையும், ஆளாமல்
துஞ்சுவதில்லை: எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் வெரும் எதிர்நின்றே

என்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

ஆக, தமிழ்மொழி செழிக்க, தமிழர்தம் நிலை உயர, தமிழா! தமிழைத் தமிழனை அரியணையில் ஏற்று.

நன்றி: தன்னுரிமை

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street, Triplicane, Chennai - 5. Editor: **V. THALAPATHI.**




Producer Jaladhi Umasankar's Kritikaa Recording Company's devotional album 'Sri Mangala Maruti' was released by Dr.Eswar Srikumar, Member of Central Advisory Board, Ministry of Labour and Employment, New Delhi on 1/1/2015 at Arulmigu Sri Veera Mangala Anjaneya Temple, Nallatur, Trittani. The first copy of the album was received by Shri.M.Chakravathy, Vice-President, Tamilnadu BJP, Treasurer, South Indian Hotels and Restaurants & member Chennai Port Trust Board and the second copy of the album was received by Mr.V.J.Srivasan, President (BJP), Tamilnadu Slum Clearance Board. Children orchestra from Drum Gopal's Isai Mottugal's performance was filled with great spiritual aplomb. Bharathanatyam by students of Smt. Veena Ramakrishnan's Shree Nrityam Dance School was a visual treat and devotees were mesmerized in the musical extravaganza. Mr.Jaladhi Umasankar, Producer Kritikaa Recording Company and M.P. Venkat, (New India Assurance Company Ltd.) proposed the vote of thanks. Mr.V.Balachandar, retired DGP Chennai, Mr.Saran, Rotary Club President, Chennai, Mr. K.P.S.Viswananthan, President Trittani Golden Tower Lions Club, Triuvallur and Mr. G.HariKumar Sharma, District Chairman, Lions Club, Triuvallur also participated in the function. Mr. K.P.S.Viswananthan, President Trittani Golden Tower Lions Club, Triuvallur distributed the Certificates and Prizes to the participated children.



MUTRAM - tamil & English Monthly R.Dis No. 1678 - 2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 -16.
Date of Publication 7th of every month

